# அஞ்சுகம் முதலாண்டு நினைவு



# அறிஞர் அண்ணா அஞ்சலி மலர். 1971

Eswari





# காணிக்கை

இளமுருகு பொற்செல்வி





உலகை நடத்திச் செல்லும்
அறிஞர் பெருந்தகை

# நினைவாஞ்சலி

அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்த பின்னர் நான் கொண்ட உணர்ச்சி வாழ்வு பெரிதாகும்.

1937லேயே 'தமிழ் வாழ்க'' குரல் கொடுத்தவன் தான். தொடர்ந்து தமிழிசை மாநாடுகளிலும் தமிழ் எழுச்சி நிகழ்ச்சி களிலும் பங்குகொண்டு வந்தேனெனினும், சேலத்தில் — புதிய பாசறையில் திராவிடர் கழகமாக வளர்ந்த நேரத்தில் அண்ணா அவர்களைச் சந்தித்த நேரடித் தொடர்பு ஒரு சுறுசுறுப்பைத் தந்தது — தந்து கொண்டேயிருக்கிறது.

அண்ணா அவர்களிடமுள்ள அடக்கமும், கண்ணோட்டமும், கருமஞ்சிதையாது காரியமாற்றும் ஆற்றலுமே மிகச்சாதாரண மானவர்களைத் துணையாகக் கொண்டு துவக்கப் பட்டதாயினும் — ''கழகம்'' வலிவும் பொலிவும் பெறுமளவு உயர்த்தியிருக் கிறது.

அண்ணாவின் தம்பி தி. மு. கழகத்தின் தொண்டன் என்றாலே நாட்டிலே கிடைக்கும் வரவேற்பும் அன்பும் எவரால் மறக்க முடியும்? உழைப்பின் பயனல்லவா? ஆம்! ஆம்! அண்ணாவின் உழைப்பில் — அறுவடை நமக்கு!

தொண்டர்களுக்கும் சமூகத்தில் மரியாதை; ஏழை எளிய வர்களது நிறுவனமான போதிலும், அதில் நேர்மையும் — உண்மையுமிருக்கிறது என்றால் மக்களது மதிப்பைப் பெறு கின்ற நிலைமை இரண்டையும் அண்ணா வாழ வைத்துள்ளார்.

இதனைக் கண்ட மக்கள் 1967–ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா அவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருக் கிறார்கள்! அவசரப்பட்டல்ல! அறியாத் தனமாகவுமல்ல! நன்கு தீவிரமாக ஆராய்ந்து — தெளிந்து அதன் பின்னரே — இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்'' என்று கூறிய பொய்யாமொழிப்படி திறமையும் தகுதியும் நிறைந்தவர் அவரேதான் என்று தீர்மானித்துதந்திருக்கிறார்கள்.

''வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மாந் தருக்கெல்லாம்! பயிற்றிப் பல்கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்'' என்று பாரதியார் பாடியிருக்கிறார். அமரகவி தம் பாடலில் முதன்மை கொடுத்திருப்பது ''வயிற்று க்கு''! — சோற்றுக்குத்தான்! சோற்றுக்குப் பின்புதான் கல்வி என்கிறார்.

ஆகவே எத்துறையினராயினும் வயிற்றுக்கு முதலில் சோறு — அதன் பின்னரே மற்றக் கடமைகள்; அப்படி இல்லை யேல் மாபெரும் அழிவு ஏற்படும் மனித சமுதாயத்துக்கு என்பதை வலியுறுத்தி வந்துள்ளனர் — வருகின்றனர்.

அறிஞர் அண்ணு ஆட்சி பொறுப்பேற்கு முன் நாட்டின் நிலே உணவைப் பொறுத்த வரையில் எப்படி இருந்தது என் பதை அனைவரும் அறிவார்கள்.

நாட்டவர் வாட்டம் போக்கிட நாட்டங்கொண்ட அறிஞர் அண்ணுவிடம் ஆட்சிப்பொறுப்புகிடைத்த நூறு நாட்களுக்குள் "உணவு நிலே"யில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்கள் அத்துணைப் பெரிது. இப்போது நீண்ட நெடிய மக்கள் வரிசைக்கூட்டம் உணவுப் பொருள்கள் கடைகளின் முன்பு இல்லே. உணவுப் பொருள் கிடைக்க வில்லேயென்ற ஏக்க மூச்சுடன் வெறுங்கை யாக திரும்பிச் செல்பவர் எவரும் இல்லே. கிடைக்கும் உணவு தான்யங்கள் மட்டரகமாக இல்லாது நயமாக இருக்கிறது இத்தனைக்கும் மகுடம் வைத்தாற்போல விலேயுங் குறைந்திருக் கிறது.

அண்ணு அவர்களது நீண்ட காலக் கனவு "உழைப்பவனு க்கு இந்த நாடு உரிமை" என்பது தான். அந்த அடிப்படையில் உழைக்க முன்வருபவர்கள் தொழிலகங்கள் முன்பு "வேலே காலியில்லே" என்ற அறிவிப்பைக் கண்டு வாடுவது அறிந்து வேதனேப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். அந்த நிலே மாறி ஒவ்வொரு தொழிலகம் முன்பும் "வேலேக்கு ஆட்கள் தேவை" என்ற அறிவிப்புப் பலகை விளங்க வேண்டுமென்ற திட்டம் தீட்டி செயல் பட்டுக்கொண்டிருக்கிருர்கள். அதனுடைய ஒரு அங்கமே - தூத்துக்குடி துறைமுகத் திட்டமும் சேலம் இரும் பாலேத் திட்டமுமாகும்.

'தெரிந்து விளையாடல்' என்ற சூத்திரப்படி செயலேச் செயலாக்குவதில் — நினைத்ததை நினைத்தபடி நிறைவு செய்வ தில் நமது அண்ணு அவர்கட்கு இணை அண்ணு தான்.

இதோ ஒரு எடுத்துக் காட்டு.

*1960-ம் ஆண்டு. நான் ஆசிரியராகப் பொறுப்பேற் றிருந்த "மக்களாட்சி" எனும் பத்திரிகையில் மலருக்குத் தந்திருந்த கட்டுரையில் அண்ணு அவர்கள் குறிப்பிட்ட சில கருத்து மாணிக்கங்களேப்பாருங்கள்-" பார்ப்பனர்களேத் தனிப் பட்ட முறையில் வெறுக்க வேண்டிய அவசியமில்லே என்றும் பார்ப்பனர்களுக்கு என்று இருக்கின்ற உரிய பங்கைத் தந்து பார்ப்பனரல்லாதாருக்கு என்று இருக்கின்ற உரிய பங்கு பார்ப்பனரல்லாதாருக்கு வேண்டும் என்ற நீதியை அடிப்படை யாகக் கொண்டதால் தான் ஜஸ்டிஸ் கட்சிக்கு "நீதிக்கட்சி" யென்றே தமிழில் பெயரிடப்பட்டது. ஜஸ்டிஸ் கட்சி அமைச் சரவை அமைக்கப்பட்ட நேரத்தில் சேதுரத்னம் ஐயர் என்ற ஒரு பார்ப்பனரும் மந்திரியாக இருந்தார்.*

*... அரண்மனையிலிருந்திட்ட ஜஸ்டிஸ் கட்சி வெட்ட வெளி க்கு ஆலமரத்தடிக்கு வந்ததால் தான் அது மக்களுக்குப் பயன் படுமென்று கருதி சேலத்திலே நடைபெற்ற மாநாட்டில் பெரியார் இராமசாமி அவர்கள் 'மிகப்பாடுபட்டு எங்களே யெல்லாம் துணைக்கு வைத்து, கொண்டு வந்தார்கள்.*

*... ஆலமரத்தடிக்குக் கொண்டு வந்த பிறகு ஜஸ்டிஸ் இயக்கம் இன்றைய தினம் நீண்ட நாளேக்கு ஆலமரத்தடி யிலேயே இருந்து விடக்கூடாதென்று நான் மேலும் கொஞ்சம் விரிவான திடலுக்கு அழைத்து வந்திருக்கிறேன்.*

*பெரியார் இராமசாமி அவர்கள் ஆலமரத்தடியிலேயே நின்று கொண்டால் போதுமென்று எண்ணி விட்டார்கள்......*

(4-ம் பக்கம் பார்க்க)

# தொட்டுத் தொடர்க!

தி. நா. சொ. மீனாட்சிசுந்தரம்

எதையும் தாங்கும் இதயம்
இங்கே உறங்குது என்றதனைக்
கண்டேன்.
கடைவிழிகளில் பொங்கிற்று...

சற்றே விழித்திடு
உன் காந்தக் கண்களைக்காட்டிடு
செவ்விதழ் புன்னகை சிந்திடு
கேளிதனை......

நல்லபடி அளக்கின்றார்
கருணையுடன் நிதிகூட்டி-மிக
நல்லபடி யளிக்கின்றார்
வீடெல்லாம் வாழ்த்த
நாடெல்லாம் போற்ற

மாதவமும் செய்தே
சேலத்துக் கனிவளமும்!
தூத்துக்குடித் துறைமுகமும்
தமிழுக்கு அரியாசனமும்
பெற்றுத் தந்தார்

என்றெல்லாம் இன்னும்பல
அடுக்கடுக்காய் எடுத்துரைக்குமுன்னே
சந்திக்கும் வேளை
விரைந்து வந்திட்டது 71ம்

வாழ்வும் வளமும் பொங்குக
வளமான இவ்வாட்சி தொடர்க
மகிழ்ச்சி பொங்குக!

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

... 1917-ஆம் ஆண்டிலிருந்து 1957-ஆம் ஆண்டு வரை நடைபெற்றதைச் சொன்னதற்குக்காரணம், எப்படி நம்முடைய தலைவர்கள் போட்ட வித்து இடையிலே நன்றாக முளைவிட்டுச் செழுமையான செடியானாலும் இடைக்காலத்தில் அதை அழிப்பதற்கு எத்தயோ பேர் முயற்சி செய்தாலும் எப்படி அது நல்ல முறையிலே வளர்ந்திருக்கிறதோ, **அதைப் போலத்தான் 1957-ஆம் ஆண்டில் நமக்கிருக்கின்ற இந்த வளர்ச்சி 1967 ஆம் ஆண்டில் நாமே கண்டு ஆச்சரியப்படத்தக்க அளவுக்கு மிக அதிகமான வளர்ச்சியாகப் போகிறது, இதிலே யாருக்கும் ஐயம் தேவையில்லை......**

— இப்படி ஏழாண்டுகளுக்கு முன்பு நமது வழி காட்டும் தலைவர் அறிஞர் பெருந்தகை கூறியபடி நாடே ஆச்சர்யப் படத்தக்கபடி 1967-ஆம் ஆண்டு வந்துள்ளதல்லவா? இதைப் போலவே நம் நாட்டின் தொழில் வளர்ச்சியும் வேலையில்லை யென்ற ஏக்கமும் நீங்கி வேலைக்கு ஆள் தேவையென்கிற நிலையும் ஏற்பட்டே. தீரும் என்பது உறுதி!

நன்றாக சிந்தித்தால் தான் அண்ணா அவர்களது ஒவ்வொரு சொல்லுக்கும், செயலுக்கும் உள்ள அளவு புலப்படும். **1957 ஆம் ஆண்டுக்கும் 1967 ஆம ஆண்டுக்கும் நடுவில் 1962ஆம் ஆண்டிருந்தது —தேர்தலும் இருந்தது. ஆயினும் நாமே கண்டு ஆச்சர்யப்படும் ஆண்டு 1967 என்றும் கூறியது சிந்திக்கத் தக்கது.**

நமது வாழ்வின் புதிய பொன்னேடு திருப்பப்பட்டுவிட்டது — வளமான வாழ்வுக்கான ஒளிக்கதிர்கள் ஒளிபரப்புகின்றன.

அண்ணா பிறந்திருக்கவில்லையானால், நினைக்கவே நெஞ்சம் நடுங்கும் நினைவுதான் — நினைத்தால் தானே தெளிவு பிறக்கும் - வெய்யில்தானே நிழலருமையைத் தெரிவிக்கின்றது! தமிழன் அழிந்து போயிருப்பான் — ஏழை எளியவர்கள் மனிதனாகப் பிறந்திருந்தாலும்•மாக்களாகவாழவதைக்கப்பட்டிருப்பார்கள்!

ஆண்டவன்பால் மெத்த பக்தி கொண்டவர்கள், ''பிறவா வரம் தா — அப்படிப் பிறந்தால் மறவாதவரம் தா'' என்று வேண்டியதாகப் பாடல்கள் உள்ளன.

அறிஞர் பெருந்தகை; அன்பின் எதுகை; ஆற்றலின் சிகரம்; சிந்தனையின் ஊற்று; செயலின் மறுவடிவம் இத்தனையும் ஒருங்கு இணைந்த மாவடிவத்தை இதற்கு முன் எவரும் கண்டிருக்க முடியாது — ஆனால் நாம் இதோ அண்ணாவாகக் கண்டு மகிழுகிறோமே! அவரது தம்பியாகப் பிறந்ததேபெரும் பேறெனக்கருதி அகம் மிக மகிழ்கிறேன் நான்.

அவரது தம்பியாக, படை வரிசையின் போர் வீரனாக கட்டளைக்குக் காத்திருக்கும் கடமையாளனாக இருக்கும் பேற்றை உறுதி செய்து கொள்வதே அறிஞர் அண்ணாவை நினைவுகூறும் நேரத்தில் நமது குறிக்கோளாக உறுதிவழியாக இருக்க வேண்டும் — இதுவே —

**அறிஞர் அண்ணாவுக்கு நான் — இல்லை இல்லை — நாம்' தமிழக நன்றியுணர்வுள்ள மக்களனைவரும வழங்கும் நினைவாஞ்சலியாகும்!**

இளமுருகு பொற்செல்வி



# தேர்தல் அறிக்கை
# 1971

## தி. மு. கழகம்
### (தமிழ்நாடு)



கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு எனும் பொன்மொழி புகன்று, திராவிடக் கலாசாரத்தின் நாயகருள் ஒருவராகத் திகழ்ந்து, 'இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழர்' எனப் போற்றப்பட்டு, 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்ற தத்துவத்தின் அடிப்படையில் நாடுவாழவும் நலிவுகள் தீரவும் மக்களின் உரிமைக்குரலை எதிரொலிக்கும் பாசறையாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவி, பதினெட்டே ஆண்டுகளில் தமிழகத்தை ஆளும் கட்சியாக ஆக்கி, நம்மையெல்லாம் கண்ணீர் வெள்ளத்தில் மிதக்கவிட்டு, மீளாத்துயில் கொண்டு விட்ட அறிஞர் அண்ணா அவர்களுக்கு அஞ்சலிசெலுத்தி, அவர் வகுத்த கொள்கைகளையும், கண்ட கனவுகளையும் செயல்படுத்துவதற்கு இதுவரையில் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை நினைவு படுத்தி, மேலும் மேற்கொள்ள இருக்கும் முயற்சிகளுக்கு உருக் கொடுக்கத் திட்டமிடும் இந்தத் தேர்தல் அறிக்கையைத் தி. மு. கழகம் உங்கள் முன் வைக்கிறது.

சமுதாய சீர்திருத்தத் தொண்டு-கலாச்சார வளர்ச்சிப் பணி-ஆகிய பல்லாண்டு காலப் பின்னணியோடு 1949-ஆம் ஆண்டு துவங்கிய தி. மு. கழகம், எதிர்க்கட்சியாக இருந்த போது ஏற்ற கொள்கைகளுக்காகத் தீரமிக்க போராட்டங்களை நடத்தி, கொடிய அடக்கு முறைகளுக்கு ஆளாகி, பலதீரர்களைப் பலிகொடுத்து, "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை-எமை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை" எனச்சிந்துபாடிச் சிறைவாசங்களை ஏற்று; தமிழகப் பொது மக்களால் தங்களுக்குப் பாதுகாப்பான ஒரு ஆயுதமாக ஆக்கப்பட்டு, சென்ற 1967 பொதுத் தேர்தலில் — எதிர்க்கட்சியாகப் போராடும் நிலையிலிருந்து ஆளுங்கட்சியாக அமைந்து ஏற்றுக்கொண்ட இலட்சியங்களைச் செயல்படுத்தும் நிலைமைக்கும், மத்திய அரசோடு தமிழகத்திற்காகப்போராடும்நிலைமைக்கும் மக்கள் சக்தியினால் மாற்றப் பட்டது, தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க மகத்தான நிகழ்ச்சியாகும்.

தி. மு. கழகம், எந்தத் தேர்தல் அறிக்கையை மக்களின் முன்வைத்து அவர்களின் அன்பான கட்டளையைஏற்று 1967ல்

ஆட்சிப் பொறுப்பை ஏற்றதோ அந்தத் தேர்தல் அறிக்கையின் பெரும் பகுதியினை நிறைவு செய்திருக்கிறது என்பது பெருமைக்குரிய :செய்தியாகும்.



தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது என்பது அரசியல் உலகில் அபூர்வமானது என்பதும், அந்த வாக்குறுதிகளில் பலவற்றை அரசுப் பொறுப்பேற்ற தி. மு. கழகம் நிறைவேற்றியிருக்கிறதென்பதும் குறிப்பிட்டுக்காட்ட வேண்டிய ஒன்றாகும்.

* இந்தி ஆதிக்கத்தைக் கழகம் எதிர்த்துப் போராடும் என்று உறுதியளித்தது அந்தத் தேர்தல் அறிக்கை. தமிழ்நாட்டில் தமிழ், ஆங்கிலம் இரண்டும் தான் — இந்திக்குப் பள்ளிகளில் வேலையில்லை என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

* தமிழ்மொழியின் ஆக்கத்திற்குக்கழகம் பாடுபடும் என அறிவித்ததற்கேற்ப, எங்கும் தமிழ்மணம் கமழச்செய்யும் முயற்சியில் வெற்றி பெற்று வருகிறது கழக அரசு.

* தமிழ்நாட்டுக்கு "தமிழ்நாடு" எனப்பெயரிட வேண்டுமென அன்று கழகம் வற்புறுத்தியது இன்று கழக அரசு அதனைச்செயலாக்கியது.

* விலைவாசி ஏற்றத்தைத் தடுத்திட எடுத்த உறுதியில் பின்வாங்காமல், விலைவாசியைக் கட்டுப்படுத்திட எடுத்த முயற்சியில் கழக அரசு ஓரளவு வெற்றி பெற்றுள்ளது.

* சேலம் இரும்பாலை, கிழக்குக் கடற்கரை நெடுஞ்சாலை, கல்பாக்கம் திட்டம், சென்னைக் குடிநீர் திட்டம், தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம், மற்றும் பல்வேறு தொழில்வளங்களைப் பெற்றிடப் பணியாற்றும் கழகமெனத் தேர்தல் வாக்குறுதி அளித்தது வீண் போகாமல் அனைவரும் மகிழத் தக்க வண்ணம் அவைகளைப்பெற்றுத்தந்துள்ளது கழகஅரசு.

* வங்கிகள், பேருந்து வழித் தடங்கள் தேசியமயமாக்க முயற்சிகள் எடுக்கப்படும் என அறிவித்ததற்கு ஏற்பஅதில் படிப்படியான வெற்றிச் சாதனையைக் கண்டிருக்கிறது கழக அரசு.

* தாங்கக் கூடியவர்களுக்கே வரி போட வேண்டும் என்று வாதாடியது கழகம். அதே நிலையில் நன்செய், புன்செய் நிலங்களுக்கு மட்டுமின்றி பல்வேறு இனங்களுக்கு வரி விலக்கு செய்துள்ளது கழக அரசு.

* நில உச்சவரம்பு முப்பது ஸ்டாண்டர்டு ஏகரா என்பதை பதினைந்து ஸ்டாண்டர்டு ஏகரா என மாற்றவேண்டுமெனக் கழகம் கூறியது. அதனைக் கழக அரசு செய்து முடித்தது.

* வீண் சிரமங்களைத் தருகின்ற கட்டுப்பாடுகள், அனுமதி முறைகள், நீக்கப்படக் கழகம் வாதாடும் என அறிவித்தது. அதற்கேற்ப உணவுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது. படிப் படியாக அனுமதி முறைகளும் பல துறைகளில் அகற்றப் பட்டுள்ளது.

* கைத்தறித் தொழில் காப்பாற்றப்பட்டாக வேண்டுமென்று கழகம் எடுத்த உறுதிக்கேற்ப, கழக அரசு பலவகையிலும் அந்தத் தொழிலுக்குத் துணை நின்று வருகிறது.

* பின் தங்கிய மக்களின் நலன்களை கவனிக்கத் தனி அரசாங் கப்பிரிவுகள் அமைக்கப்படும் என்றது கழகம். தனி அர சாங்கப்பிரிவு மட்டுமல்ல; அந்தத் துறைக்கென ஒரு அமைச்சரும் இன்றைய கழக அரசில் இருக்கின்றார். பின் தங்கிய மக்கள் நலனுக்காக ஒரு குழுவும் அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் அறிக்கை சில நாட்களுக்கு முன் தரப் பட்டு அது அரசாங்கப் பரிசீலனையில் இருக்கிறது.

* தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம் — தீண்டாமை ஒழிப்பு — ஆகியவற்றுக்காகத் திட்டங்கள் தீட்டும் கழக மெனத் தேர்தல் அறிக்கை கூறியது. அவர்களுக்கு எண் ணற்ற சலுகைகள் அளித்தது மட்டுமல்ல; தீண்டாமை ஒழிப்புக்கு மனமாற்றம் தேவை என்ற அடிப்படையில், கலப்பு மணத் தம்பதிகளுக்கு அரசின் சார்பில் பரிசளிப்புப் பாராட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றன.

* குடிசை வாழ் மக்களுக்கு நிரந்தரமான இடமும் நிம்மதி யான வாழ்வும் அளிக்கக் கழகம் உறுதிபூண்டது, தேர்தல் அறிக்கையில்; இன்றைக்குக் குடிசைகளை மாற்றி நல்ல வீடுகளாக மாற்றும் குடிசைமாற்று வாரியத் திட்டம், ஏழாண்டு காலத்திற்குள் அந்தப் பணியை சென்னையிலும் படிப்படியாக தமிழகம் முழுமையிலும் நிறைவேற்றிட வேண்டி அமைக்கப்பட்டுள்ளது.

* குடிநீர்; கழிவுநீர்த் திட்டம் பற்றிய கழகத்தின் ஆர்வம் தேர்தல் அறிக்கையோடு நின்று விடவில்லை. 1973-க்குள் தமிழ்நாடு முழுதும் அந்தத் திட்டம் நிறைவேறச் செயல் முறைகள் வகுக்கப்பட்டு, அதற்கென தண்ணீர் வாரியம் (Water Board) உருவாக்கப்பட்டு, அந்தப் பணியில் கழக அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

* ஊராட்சி மன்ற — ஒன்றியத் தேர்தல்களில் தலைவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்க வழி செய்யும் கழகம் என்று அளித்த வாக்குறுதியின்படி முதற்கட்ட மாக ஊராட்சி மன்றத் தலைவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் நிலையைக் கழக அரசு ஏற்படுத்தியது

* சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்கச்சட்டம் இயற்றுவோம் என்று கூறியதை மறவாமல், அதனைச் சட்டமாக்கிய பெருமை, கழக அரசுக்கு உண்டு.





**1967 தேர்தல் அறிக்கையில் குறிப்பிடாத பல்வேறு நற்பணிகளையும், கழக அரசு செய்திருக்கிறது என்பதை எவரும் மறுத்திடார்.**

* வள்ளுவர் நாள், நபிகள் பிறந்த தினம், மேதின விழா ஆகிய நாட்களை, அரசு விடுமுறை நாட்களாக ஆக்கியுள்ளது கழகஅரசு.

* விடுதலை நாள், குடியரசு நாள், காந்தி பிறந்த நாள், நேரு பிறந்த நாள் ஆகிய நாட்களை ஒரு கட்சிக்கே உரியது என்றில்லாமல் தேசியத் திருவிழா என்ற அளவில் அனைத்துக்கட்சித் தலைவர்களையும் அழைத்து சீரோடு நடத்திவருகிறது கழக அரசு.

* காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் காங்கிரஸ் தியாகிகள் சுமார் நூறுபேருக்கு மட்டுமே மாதாந்திர உதவித்தொகை அளிக்கப்பட்டதற்கு மாறாக, இந்த நாலு ஆண்டு காலத்தில் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட காங்கிரஸ் தியாகிகளுக்கு மாதாந்திர உதவிப்பணம் வழங்குகிறது கழக அரசு.

* சிறந்த சேவை செய்யும் போலீசாருக்கு ஆண்டு தோறும் அண்ணா பிறந்த நாளன்று முதலமைச்சர் பதக்கமும், ரூபாய் மூவாயிரம், இரண்டாயிரம், ஆயிரம் என்ற வகையில் பண முடிப்பும் வழங்கி வருகிறது கழக அரசு.

* வறட்சிப் பணிகளுக்காகப் பல்லாயிரம் கிராமங்களில் பதினெட்டுக் கோடி ரூபாய் வரையில் செலவழித்துப் பஞ்சம் வராமல் விரட்டி, பசுமைப் புரட்சியின் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கி அரிசிக் கஷ்டத்தைப் போக்கியது கழக அரசு.

* கிடப்பில் இருந்த பரம்பிக்குளம் ஆளியாறு ஒப்பந்தத்தை கேரள அரசோடு பேசி. சுமூகமான முடிவுக்கு வந்தது கழக அரசு. அதன் தொடர்பாக பல லட்சம் ஏக்கரா நிலங்களுக்குப்பயன் ஏற்படுவதோடு, கோவை நகருக்குச் சிறுவாணி குடிநீர்த் திட்டமும் நிறைவேறுகிறது.

* பத்துக்கு மேற்பட்ட புதிய அணைக்கட்டுக்கள் இந்த நான்கு ஆண்டு காலத்தில் அனுமதி வழங்கப் பெற்று வேலைகள் தொடங்கப் பெற்றுள்ளன.

* பின்தங்கிய நலன் பேண ஒரு குழுவும், போலீசார் குறை தீர ஒரு குழுவும், அரசு ஊழியர் ஊதிய உயர்வுக்கென ஒரு குழுவும் அமைக்கப்பட்டு பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

* ஊதியக்குழு சிபாரிசுக்கேற்ப தமிழக வரலாற்றிலே இல்லாத அளவுக்கு, மற்ற மாநிலங்களைப் பலவகையிலும் மிஞ்சுகிற அளவுக்கு அரசாங்க ஊழியர்களுக்கு இருபது கோடி ரூபாய்க்குமேல் சம்பள உயர்வு தரப்பட்டிருக்கிறது.

* இரகசியக் குறிப்பேடு முறை மறைந்து, பகிரங்கக் குறிப்பேடாகியுள்ளது கழக அரசில்.

* அரசு ஊழியர்கட்கு இரண்டாயிரம் ரூபாய் திருமணக்கடன் வழங்கும் திட்டம், கழக அரசில் உருவானது.

(41-ம் பக்கம் பார்க்க)

# நிலாவாயினன்

புலவர் அருணை பொன்னுசாமி

காஞ்சியிலே காந்தியாகப் பிறந்துகாட்டினன் — உலகைக்
கவரும்வகை பேச்சினையே கறந்துகாட்டினன்.
வாஞ்சையுடன் ஊறிவரும் அறிவுஆயினன் — இங்கே
வாதமிட வருவோர்க்கு முறிவிஆயினன்.

கடமைதனைக் கண்ணியத்தைக் கட்டிக்காத்தனன் — இங்கே
'கன்னுபின்னு' ஆட்சிதனை வெட்டிச்சாய்த்தனன்.
மடமைதனைச் சாதிதனைச் சாடிவைத்தனன் — நல்ல
மரிக்கொழுந்துக் கழகத்தைத் தேடிவைத்தனன்.

செந்தமிழை ஆட்சிமொழி சட்டமாக்கினன் — பரிசுச்
சீட்டுதனை முதன்முதலில் திட்டமாக்கினன்.
இந்திக்கே இந்நாட்டில் பாடைகட்டினன் — நல்ல
இன்றமிழின் புகழ்மணக்க மேடைகட்டினன்.

பாடுபட்டு முன்னேறப் பாதையாயினன் — நாளும்
பைந்தமிழர் வரலாற்றின் காதையாயினன்.
நீடுபுகழ் பேச்சில்கற் கண்டுஆயினன் — வாழ்வில்
நித்தமவன் மணக்கும்மலர்ச் செண்டுஆயினன்.

தமிழுலக மக்களுக்கு மன்னனாயினன் — கழகத்
தம்பியர்கள் அனைவர்க்கும் அண்ணனாயினன்.
சிமிழ்க்காத விழியுடனே உலாவாயினன் — இங்கே
சீர்திருத்தக் கருத்தாகி நிலாவாயினன்.



உடல் நலமில்லை யென்றாலும் உலகநலனே எனது மூச்சு.



வழி வகுத்துத் தந்த தலைவரே தமிழகம் வழிகண்டு
நடைபோடுகிறது என்று சொல்கிறார் -அறிஞர் அண்ணா

# கற்றலின் விதி முறைகள்

பேராசிரியர் : **வ. பெருமாள்** எம்.ஏ.,பி.டி.,எம்.ஆர்.ஏ.எஸ்.,



மனிதன் செயல்கள் அனைத்தையும் கல்லாத பிறவிச் செயல்கள், அனுபவத்தால் கற்ற செயல்கள் என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். நிற்றல், உட்காருதல், நடத்தல், உறங்குதல், ஓடுதல், மூச்சு வாங்குதல், மூச்சு விடுதல், உமிழ் நீர் சுரத்தல் ஆகியவை கல்லாத பிறவிச் செயல்கள் ஆகும். பந்தாடுதல், சைக்கிள் ஓட்டுதல், புல்லாங்குழல் வாசித்தல், தட்டெழுத்து அடித்தல் (Type-writig) ஆகியவை கற்ற செயல்கள் ஆகும். கல்லாத பிறவிச் செயல்கள் மக்களுக்கும் விலங்கு பறவை போன்ற உயிரினங்களுக்கும் பொதுவானவை. ஆனால் கற்ற செயல்கள் மக்களுக்குமட்டும் உரியவை. உயிரினங்களில் ஒரு சில விதி விலக்குகளும் உண்டு. எடுத்துக் காட்டாகச் சொல்லிக் கொடுத்ததை அப்படியே சொல்கிறது கிளி. மனிதன் செய்வதை அப்படியே செய்கிறது குரங்கு. இவை எல்லாம் விதிவிலக்குகளே தவிர எல்லா உயிரினங்கட்கும் பொருந்தக் கூடியவை அல்ல.

ஒரு செயலைக் கற்பதற்குமுன் உடலுறுப்புக்களும் மூளை உறுப்புக்களும் போதிய அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும். அப்பருவ நிலைக்கு முதிர்ச்சி என்று பெயர் (Maturation). தவழும் பருவத்திலுள்ள கைக் குழந்தையை நடக்கவைப்பது தவறு. அக்குழந்தை நடக்கும் என்று எதிர் பார்ப்பதும் தவறு. நடப்பதற்கு முன் குழந்தையின் கால்கள் குறிப்பிட்ட அளவுக்கு வளர்ச்சியும் முதிர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும். ஒன்று, இரண்டு, மூன்று, எண்ணத்தெரியாத இளஞ் சிறுவர்களுக்கு முக்கோணத்தைப்பற்றி விதிகளைச் சொல்லிக் கொடுப்பதால் பயனில்லை. முக்கோணத்தைப் பற்றிய விதிகளை அறிந்துகொள்வதற்கு ஓரளவு மூளைமுதிர்ச்சி வேண்டும். எனவே, ஒரு செயலைச் செய்வதற்குமுன் உடல் பற்றிய செயலாகவிருந்தால் உடலுறுப்பு முதிர்ச்சியும் அறிவைப்பற்றியதாகயிருந்தால் மூளை உறுப்பு முதிர்ச்சியும் வேண்டும் என்பது தெளிவாகின்றது.

கற்கும் செயல்கள் பலதிறப்பட்டவை. அவற்றை நாம் இரண்டு பெரும்பிரிவுகளில் அடக்கிவிடலாம். அவையாவன: இயக்கத்திறன் கற்றல் (Motor learning) கருத்து கற்றல் (Idecational learning). பம்பரம் விடுதல், வீணை வாசித்தல், ராட்டினத்தில் நூல் நூற்றல், பானை வனைதல் ஆகியவை இயக்கத்திறன் கற்றல்பாற்படும். செய்யுளை மனப்பாடம் செய்தல், விஞ்ஞான விதி ஒன்றை மெய்ப்பித்தல், சமய உண்மைகளை அறிதல் ஆகியவை கருத்து கற்றல் எனப்படும். இயக்கத்திறன் கற்றல் பெரும்பாலும் உடற்பயிற்சியைப் பொறுத்திருக்கின்றது. கருத்துக்கற்றல் பெரும்பாலும் மூளைப் பயிற்சியைப் பொறுத்திருக்கின்றது.




கற்றற்குரிய முறையைக் கல்வி நிபுணர்களும் உளவியல் அறிஞர்களும் ஆராய்ந்து தெளிந்து சில விதிகளைத் வகுத்து வரையறுத்துள்ளார்கள். அவற்றுள் முயன்று தவறிக் கற்றல் (Trial and error learning), பார்த்துச் செய்து கற்றல் (learning by initation), கூர்ந்து கவனித்துக் கற்றல் (learning by observation) ஆகிய மூன்றும் மிகவும் குறிப்பிடத் தக்கவை. பொதுவாக விலங்குகள் தட்டுத்தடுமாறித்தான் கற்கின்றன. மனிதனும் பலசெயல்களைத் தட்டுத்தடுமாறித்தான் கற்கின்றான். குழந்தை செம்மையாக நடப்பதற்கு முன்பு எத்தனை முறை தட்டுத் தடுமாறிக் கீழே விழுகின்றது? சரியாக நடப்பதற்குக் கூட முடியாமல் பலமுறை தட்டுத் தடுமாறிக் கீழே விழுந்தெழுந்த குழந்தை நாளடைவில் வளர்ந்து இளைஞனாக மாறியதும் உலக ஒலிம்பிக் ஓட்டப் பந்தயத்தில் முதற்பரிசு பெறுகிறான். நடக்கத் தெரியாத குழந்தை நடக்கக் கற்றுக் கொள்வது, முயன்று தவறிக் கற்றல் முறையைச் சார்ந்தது. இரண்டாவதாகவுள்ள கற்றல் முறை பார்த்துச் செய்து கற்பதாகும். இம்முறை குரங்கிடம் சிறப்பாகக் காணப்படுகிறது. சிறுவர்கள் பெரியவர்களின் பழக்க வழக்கங்களைப் பெரும்பாலும் பார்த்து அவற்றைப் பின்பற்றுகிறார்கள். பார்த்துச் செய்யும் முறை (initation method) பொதுவாக மக்களிடம்பரந்து காணப்படுவதால் சமுதாயம் சிறந்தோங்க நல்ல முன்மாதிரிகள் தேவை. ஆசிரியரின் பழக்க வழக்கங்கள் மாணவர்களிடம் அப்படியே படிகின்றன. நல்ல பழக்க வழக்கங்களை ஆசிரியர்களும் பெற்றோர்களும் மேற்கொள்ளும்போது சிறுவர்கள் அவற்றை அப்படியே பின்பற்றுகிறார்கள்.

மூன்றாவதாக அமைந்திருப்பது கூர்ந்து கவனித்துக் கற்றல் முறை. (observation) வானவெளி, மேகம், கதிரவன், திங்கள், விண்மீன், மழை, இடி ஆகியவற்றைக் கூர்ந்து கவனித்து அவற்றின் இயல்புகளைக் கற்கின்றோம். இவ்வாறு கற்றலில் முப்பெரும் விதிகள் உண்டு. இவற்றைத்தவிர உள்ளுணர்வு வழிக் கற்றல் (learning by inright) முறையும் உண்டு. இம்முறை எல்லோருக்கும் எளிதாகக் கைக்கூடுவதில்லை. அறிதிறனும் (I. O.) இயற்கை ஆற்றலும் மிகுதியாக உள்ளவர்கட்கே இது பொருந்தும். ஒரு பொருளையோ செயலையோ கண்டவுடன் அவற்றின் முழு உண்மையையும் உடனே அறிகின்ற ஆற்றல் ஒரு சிலர்க்குத் தாம் உண்டு. அம்முறையே உள்ளுணர்வு வழிக் கற்றல் எனப்படும்.

தார்ண்டைக் (Thorndike) என்னும் அறிஞர் கற்றல் பற்றிய மூன்று விதிகளை வகுக்கிறார். ஒரு செயலைச் செய்ய ஆயுத்தமாக இருக்க வேண்டும். ஆயுத்தமாக இருக்கும்போது தான் ஒன்றைச் செய்யவோ கற்கவோ முடியும். இதற்கு ஆயுத்தவிதி (law of readiness) என்று பெயர். ஒரு செயலை மிகச் செம்மையாகச் செய்வதற்கும் ஒரு பாடத்தை முறையாகக் கற்பதற்கும் பன்முறைப் பயிற்சி தேவை. மனப்பாடம், ஆடல், பாடல், நடிப்பு, ஓவியம், ஆகியவற்றில் திறமை பெறத் திருத்தமான பயிற்சி வேண்டும். இதற்குப் பயிற்சி விதி என்று பெயர். (law of exercise) ஒன்றைச் செய்வதால் செய்பவனுக்குப் பயன் ஏற்பட்டால் அவன் மனம் மகிழ்ந்து அச்செயலை மீண்டும் மீண்டும் செய்கிறான். பயன் ஏற்படாவிட்டால் அவன் ஏமாந்து மனந்தளர்ந்து அச்செயலைக் கைவிட்டு விடுகிறான். இதற்குப் பயன்விதி (law of effect) என்று பெயர். கற்றலைப்பற்றிய விதிமுறைகள் இன்னும் பல உண்டு. ஒரு சிலவற்றை மட்டுமே இங்குப் பார்த்தோம். ★

# திருப்பணி

இளமுருகுபொற்செவி.

**திருக்குறளால் வழி காட்டினார் வள்ளுவர் !**

**ஆவேசப் பாடல்களால் வழி காட்டினார் பாரதியார்!**

**சொல்லாலும் செயலாலும் வழிகாட்டுகிறார் நமது அண்ணா !**



" ஒரு நாட்டு மக்களின் உயர்வு; அவர்கள் கடைப்பிடிக்கும் மானிடக்காருண்ய கொள்கையினால்தான்ஏற்படுகிறது" என்று அரசியல் ஞானி தாமஸ்பெயின் கூறியிருக்கும் கருத்துக்கு வழி காட்டி நமது திருவள்ளுவர்தான். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மானிடக் கருணையின் மாண்பை நல்லாற்றில் நிற்கும் துணையைத்தூண்டிக்காட்டி, தான் பிறந்த நாட்டின் புகழை உயர்த்தியவர் திருவள்ளுவர்.

"பாதகஞ் செய்பவரைக் கண்டால் உடனடியாக மோதி மிதித்துவிடு; அவர் முகத்தில்காரிஉமிழ்த்து விடு." என்றும், "ஓயுதல் செய்யோம், தலை சாயுதல் செய்யோம்" என்றும் காலத்தை வெல்லவும், காலத்தைக் காணவும் ஆவேசப் பாடல்களைப் பாடி மக்களைப் புத்துணர்ச்சி கொள்ளச் செய்த வழி காட்டி பாரதியாராகும்.

அடக்கத்துடன், ஆனால் அஞ்சாது செயலாற்றும் பெருமை மிக்க வழிகாட்டி செயலறிஞர் அறிஞர் அண்ணா அவர்களாகும்.

"நரகம் மாதிரியே, கொடுங்கோன்மையை எளிதில் வீழ்த்திட முடியாது" என்ற தன்மையைக் கூறியோ, 'தவறான கருத்து உள்ளவர்களும், அன்பு மனப்பான்மை அற்றவர்களும் காலத்தால் சக்தியற்று தாங்களாகவே மறைந்துவிடுவார்கள்" என்று தத்துவம் பேசியோ, யாவும் அவன் செயல், நம்மால் என்ன முடியும் என்று சொற்சிலம்பாடியோ பொறுப்பைத் தட்டிக் கழிக்காது, சமுதாயத்தின் சிறப்புகளை நினைவூட்டி, நாட்டின் வளத்தை வகையுடன் காட்டி, வாழ்ந்தவர்கள் மட்டுமல்ல, வாழவே பிறந்தவர்கள் என்பதைச் சுட்டி-உணர்ச்சியை ஊட்டி தாமஸ்பெயினின் கருத்தான மானிடக் கருணையால் நாட்டை உயர்த்தும் திருப்பணிக்கு வழி காட்டிய ஈடு இணையற்ற தலைவர் அறிஞர் அண்ணா.

(15-ம் பக்கம் பார்க்க)






ஆமாம் தம்பி! நாம் சாமானியர்கள். ஆகவே வாய்படைத்த வம்பர்களது சொல்லைப் பொருட்படுத்தாது சாதனைப் பட்டியல்களைக் குவித்திடு



'தம்பி வா! தலைமை தாங்கவா!' என்று கட்டுப்பாட்டின் காவலர் கன்னித்தமிழகத்தின் தலைமகன் அழைக்கிறார்.

(13ம் பக்கம் தொடர்ச்சி)

**குறள் நெறி காட்டும் அண்ணனே;**
**அறவழிகண்ட அண்ணலே வாழ்க!**

ஏசல்கள்; ஏளனங்கள்; கூட இருப்பவர்களின் கோள்கள்; கூடிப்பிரிந்தவர்களின் குளரல்கள்; குதறல்கள்; தம்மையே உணராது தாழ்ந்த வாழ்க்கையைத் தமக்குத் தாமே உரிமை யாக்கிக் கொண்டவர்கள் — தங்களுக்குத் துணை புரிய முன் வருபவர்களையே தாக்கி களிப்படையும் குணங்கொண்டவர்கள் ஆகிய இத்தனைபேர்களுக்கும் ஈடுகொடுத்து விழிப்புணர்ச்சி கொண்டவர்களாக அவர்கள் எழுச்சி கொண்டு தலை நிமிர்ந் திடத்தக்க அறிவு ஆற்றலைத் தந்த தலைமகன் அறிஞர் அண்ணா!

பெருமை நமக்கு! நாட்டின் நலனுக்காக வாழ்ந்து வருப வரின் காலத்தில் வாழ்கிறோம் - அவர் சுட்டிக் காட்டும் வழியில் அவரை வழிகாட்டிடும் தலைவராகக்கொண்டு நடைபோடுகிறோம் என்பதால்.

திருக்குறளால் வழி காட்டினார் திருவள்ளுவர் !

ஆவேசப்பாடல்களால் வழி காட்டினார் அமரகவி பாரதியார்!

சிந்தனை சக்தியால் செயலையும் சொல்லையும் உயிராக்கி வழி காட்டும் தலைவர் அறிஞர் அண்ணா!

காட்டிய வழி, ஈட்டிய புகழில் இதோ ஒன்று. தமிழன் பிறந்தது தமிழகத்தில் — தமிழனின் வீட்டில் தான். ஆனால் 'பிறப்பு' என்ற தமிழ்ச் சொல்லை, தான் பிறந்ததும் சாகடித்து விட்டு, 'ஜனனம்' என்ற வேற்று மொழிச் சொல்லை பிறக்க வைத்துக் கொண்டிருந்தான்.

வாழ்க்கையை முழுமையாக்கும் நிகழ்ச்சி திருமணம்· நல்லறமான இல்லறத்தை மேற்கொள்ளும்போது 'திருமணம்' என்ற மணமிக்க மாந்தமிழை மறந்துவிட்டு 'விவாகம்' என்ற விவகாரத்தை வளர்த்துக்கொண்டிருந்தான்.

வீடு கட்டுவதில் உள்ள முயற்சி, சிறப்பு இவற்றை விளக்கவே 'வீட்டைக் கட்டிப்பார்' என்றனர் முன்னோர்கள். புதுவீட்டைக் கட்டி முடித்துக் குடி புகுந்திடும்போது 'புதுமனை புகுதல்' என்ற நல்ல தமிழ்ச் சொல்லிருக்க 'கிரகப் பிரவேசத் தைப்புகச் செய்துகொண்டிருந்தான்.

இப்படி இடைக்காலத்தில் தமிழ்ச் சொற்கள் பலவற்றைச் 'சாகடித்து' தன் புகழையும் பெருமையும் இழந்து கொண்டி ருந்த தமிழ்ச் சமுதாயத்தைத் தட்டி எழுப்பி தலைநிமிரச்செய்து இன்று மறுமலர்ச்சிக்கு வழி வகுத்து வழிகாட்டிய தலைவர் அறிஞர் அண்ணா!

திருநெல்வேலிக்குப் பக்கத்தில் உள்ள ஒருஊரில் இலக்கிய நிகழ்ச்சியில் "இலக்கியப்பிரசங்கம்" என்று அச்சிட்டுவழங்கி யிருந்தனர். நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இருந்த தமிழ்க்கடல் திரு. கா. சுப்பிரமணியம் எம். ஏ. எம். எல். அவர்கள் "இலக்கிய மன்றமே இப்படி சொற்கொலை செய்தல் தகாது" என்று கூறி 'இலக்கியச் சொற்பொழிவு' என்று நல்ல தமிழ்ச் சொற்களால் தலைப்பை மாற்றி அச்சிட்டு வழங்கச் செய்தார். அதைக்கண்ட அந்த இலக்கிய மன்றத்தார்களே, ஏன் - தமிழறிஞர் என்று மதிக்கப்பட்டவர்களே, "இதோ சொற்பொழிவு வருகிறது; இதோ சொற்பொழிவு போகிறது என்று ஏளனம் செய்தனர். அந்தத் தமிழகத்தில்தான் இன்று "பிரசங்கம்" என்று கூறு

பவர்களைப் பித்தர்கள் எனவும், ஐந்தாம்படையினர் எனவும் கூறுமளவு தனது பணியால் தமிழுணர்ச்சி பெருகிட வெற்றி கண்ட வழிகாட்டிடும் தலைவர் அறிஞர் அண்ணா.

மொழி, நாகரீகம், பண்பாடு அத்தனையும் புதுமெருகுடன் மிடுக்காக நடை போடுகிறது. தமிழகத்தில் என்றால் அதற்குக் காரணம் தமிழகம் பெற்றிருக்கும் தனிச்சிறப்புடைய வழி காட்டியாகிய தலைவர் அண்ணாவால்தான். மக்கள் மனதில் மருட்டிக் கொண்டிருக்கின்ற 'கிலி' பாகிஸ்தானின் மிரட்டலை விட, சீனாவின் சீறலைவிட அதிகம் இடம் பெற்றிருப்பது 'கிலி' தான். 1967-ஆம் ஆண்டிலும் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வாய்ப்பைத் தப்பித் தவறி காங்கிரசு கட்சியே பெற்றுவிட்டால் — நமது வீட்டு அடுப்பிலிருக்கும் பானையில் 'எலி' தான் வேகுமோ என்ற கிலி மிக அதிகம். காரணம் எலியின் சுவை யைக் கண்டு விண்டது உத்திரப் பிரதேசமல்லவா? உத்திரப் பிரதேசம் தனியொரு மாநிலந்தானே என்று எண்ணினால் தவறு, தவறு.

கிலிதரும் எலியைத் தரவிருப்பது உத்திரப் பிரதேசம் என்பதைவிட பாரதக் காங்கிரசு என்பது பொருந்தும்.

உணவு, உடை, உறைவிடம் இப்படி எல்லாவகைகளிலும் ஏழை நடுத்தர மக்களின் நல்வாழ்வுக்காக வழி செய்வது என்றால் ஆட்சி மாற்றந் தவிர வேறு வழியில்லை. ஆட்சி மாற்ற முயற்சி சாதாரணமானதல்ல. வலுப் பொருந்தியவர்களின் தாக்குதல்; அவர்கள் கையாளும் பலவகை தந்திர சாகசங்கள்; பணம் — பதவி, பாவை போன்ற மயக்கங்கள். இத்தனையை யும் சந்தித்து — சமர்புரிந்து — நீதிகாண வேண்டும்.

சிரமத்திலும் சிரமமான செயல்தான். எனினும் நாட்டின் நலனுக்காக, மக்களது நல்வாழ்வுக்காக துன்பங்களையும் துய ரங்களையும் துச்சமாக மதித்து – இல்லை; இல்லை இன்பமாக ஏற்றுக் கொண்டு செயலாற்றும் நீதிச் செம்மல் அண்ணா அவர்கள் வழி நமக்குத்துணை.

நம் ஆயுட்காலம் முழுவதுமே துன்பத்தையும் கொடுமையுமே அனுபவிக்க வேண்டி வந்தாலும் அவற்றைப் பொறுமையோடு ஏற்று, நமக்கு மறுக்கப்பட்டுள்ள இன்பத்தையும், நிறைவை யும் நமது வாரிசுகளாவது பெற்று மகிழ்ச்சியாக வாழ்வதற் குரிய நல்லாட்சியை அமைக்க நாம் தளராது வேலை செய்தே யாக வேண்டும்.'' — என்பதைத் திட்டவட்டமாக அறிஞர் பெருந்தகை கூறிவிட்டதுடன், அந்த நல்ல முயற்சியில் தன்னை முழுதும் ஈடுபடுத்தி செயல்பட்டு வருவதின் மூலம் நமது கடமையைச் சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கிறார் வணக்கத்துக்கு உரிய வழிகாட்டும் தலைவர் அறிஞர் அண்ணா.

''எங்களது உயிரான நீதியின் வழிகாட்டியே, குடும்பத்து அண்ணனே! அரசியல் தானைத் தலைவரே! அறிஞர் அண்ணா அவர்களே! உறுதி தருகிறோம், எங்களது தமிழ் மீது. 'ஈதல் இசைபட வாழ்தல்' என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்கண மாக வாரி வாரி வழங்கிய வள்ளல்களைப் போல் இன்றும் அதே துறையில் வாழ்ந்து காட்டும் வள்ளல்மீதும் ஆணையிட்டு பொல்லாத ஆட்சியை இல்லாததாக்கி, நல்லவர் அனைவரும் மகிழும் நீதியின் நல்லாட்சியை மலரச் செய்ய நாளெல்லாம் உழைப்போம் தாங்கள் காட்டிடும் வழியில்'' என்று தெரி வித்து மகிழ்கிறோம்.

**வாழ்க அறிஞர் அண்ணா!**
**வெல்க உதய சூரியன்!!**

(44-ம் பக்கம் தொடர்ச்சி)

விஞ்ஞான யுகத்திற்கேற்ற சமதர்மச் சமுதாயம் அமைப்பதே நமது இலட்சியம் என்று கூறுகிற நேரத்தில்; இந்த நோக்கத்தில் நமது பொருளாதாரக் கொள்கையும், சமுதாயக் கொள்கையும் இணைந்திருப்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

சாதி—பேதம் நிறைந்த நிலப்பிரபுத்துவ சமுதாயம் நமது வளர்ச்சிக்குப் போடப்படும் விளங்காகும்.

ஆசியாவின் மிகப்பெரிய சமுதாய சீர்திருத்த இயக்கமான நமது இயக்கம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இத்துறைகளில் செய்திருக்கும் சாதனைகள் சாதாரணமானதல்ல.

—ஆகவே சமுதாய சீர்திருத்தத்துறையில் நமது பணி தொடர்ந்து நடைபெறும். அதுவே விஞ்ஞான யுகத்திற்கேற்ற சமுதாயம் உருவாகும் வழி என்று கருதுகிறோம்,

'சோஷலிச சமுதாயம்' நமது இலட்சியமாக இருப்பதால் அடிப்படை உரிமைகளை அழித்துவிட்டு; வறுமையை அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுப்பது என்பது கழகத்தின் நோக்கமல்ல.

**ஏழை எளிய மக்கள் வாழ்வு ஒளிபெற - சமூக நீதி நிலைத்திட - சோஷலிசம் நடைமுறைக்கு வந்திட - தனி மனிதனின் வாழ்வுக்கான அடிப்படைச்சொத்து உரிமைகளைச் சீர்குலைக்காமல் கழகம் சீரிய பணியாற்றும்.**

இத்தகைய இலட்சியம்; உற்பத்தியையும். உற்பத்தித் திறனையும் பெருக்குவதால் மட்டும் நிறைவேறிவிடாது.

அதிகமாகின்ற உற்பத்தி ஒரு சிலரது பணப்பெட்டியை மட்டும் நிரப்பாமல், அனைவருக்கும் அந்தப்பலன் வினியோகம் ஆவதில் தகுந்த, எச்சரிக்கையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வரலாற்றில் வேறு என்றுமே இல்லாத அளவு உற்பத்தித் திறன் ஜப்பானில் பெருகியிருந்த காலம் சென்ற யுத்தத்திற்கு முற்பட்டகாலமாகும்.

ஆனால் எதை விலையாகக் கொடுத்து அப்படி உற்பத்தித் திறனை பெருக்கினர்?

தொழிலாளிகள் 14 மணி நேரத்திற்கு மேல் உழைக்க வற்புறுத்தப்பட்டனர். வயதானோரும், குழந்தைகளும் கட்டாயப்படுத்தி வேலை வாங்கப்பட்டனர். நாஜி காலத்து ஜெர்மனியிலும் இதே நிலைதான்.

—இப்படி உற்பத்தி பெருகியும் அதன் பலனை ஜப்பானின் ஐந்து பெரிய குடும்பங்களே அனுபவித்தன என்பதுவரலாற்று உண்மை.

நாஜிகளும் அம்முறையை 'தேசிய சோஷலிசம்' (National Socialism) என்றுதான் வர்ணித்தனர்.





—எனவே ஒரு சில நபர்களின் இரும்புப் பெட்டியை நிரப்பும் உற்பத்திப் பெருக்கத்தால் மட்டும் நாட்டோருக்கு நல்வாழ்வு கிடைத்து விடாது.

உற்பத்திப் பெருக்கம் தனிநபர் ஊக்கத்திற்கு ஊறுதேடாத வகையில் அமைந்திட வேண்டும்,

அனைவருக்கும் பங்கிருக்கும் வகையில் சமூதாய நீதி கிடைத்திட வேண்டும்.

இவையே நீதியின் அடிப்படையில் அமைந்தசமுதாயத்தை அமைக்கும் நமது இலட்சியத்தின் தூண்களாக இருக்கும்.

லாபவேட்டை தவிர்த்த தனியார் துறையின் சில சிறப்பியல்புகளையும் நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்

சில பெரிய-நடுத்தர தொழில் அமைப்புகளுக்குக் கூட்டுத் துறை (Joint-Sector) முறையை அமுல்படுத்த விரும்புகிறோம்.

இதன் மூலம் அப்படி உருவாகும் தொழில் அமைப்புகளில் தனியார் துறையில் காணக்கிடைக்கும் நற்பலன்களை தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்த முடிகிறது. பொது மக்களது நன்மைகளை அரசு பாதுகாத்திட முடிகிறது. இப்படிப்பட்ட துறையினால், அரசு - அதன் மூலம் பொது மக்கள் நலன் - தனியார் துறை - அதன்மூலம் அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கும் சில சிறப்பியல்புகள் -தொழிலாளர் – ஆகிய ‘முக்கூட்டு’ உருவாக முடியும்; இதற்கு போதுமானதொரு வாய்ப்புகொடுத்துச் சோதிக்க வேண்டும் என்றும் விரும்புகிறோம்.

**திட்டம் :**

இந்தியாவில் திட்டமிடும் முறை கூட்டாட்சி முறைக்கு நேர்மாறாகச் செயல்படுவதை நீக்கிட விரும்புகிறோம்.

நாடாளு மன்றத்தின் ஒரு தீர்மானத்தின் மூலம் உருவான திட்டக் கமிஷன், அரசியல் சட்டத்தில் இருக்கும் குறைந்தபட்ச கூட்டாட்சி முறைக்கு மாறுபட்ட கருவியாக இயக்கி; மேலிருந்து திணிக்கும் ஓர் உறுப்பு (Unitary) அம்சமாகத் திகழ்கிறது.

இதன் காரணமாக மாநிலங்களின் உரிய தேவைகள் புறக்கணிக்கப்படுவதைக் காண்கிறோம்.

மாநிலங்களின் வேகமான வளர்ச்சியே இந்தியாவின் வேகமான வளர்ச்சியாவதால் திட்டமிடுவதன் துவக்கம் மாநிலத்திலிருந்து ஆரம்பமாக வேண்டும்.

கூரை வேயத் துவங்கி பின்னர் அஸ்திவாரம் அமைப்பதில்லை. அதுபோல; டில்லியிலிருந்து மேலிருந்து திட்டமிடும் முறை போதிய பலன்களைத் தரவில்லை.

அதனால்; ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு திட்டக் கமிஷன் அமைக்கப்பட வேண்டும் என்று கருதுகிறோம்.

அதன் அடிப்படையில் நமது மாநிலத்தில் ஒரு திட்டக் கமிஷன் அமைக்கப்பட வேண்டும்.

இப்படி உருவாகும் திட்டக்குழு நமது மாநிலத்தின் மூலப் பொருள் வளத்தைக் கண்டறிந்து கணக்கெடுத்து; அதைப் பெருக்குவதற்கான வாய்ப்புகளை எடுத்துக் கூறும்.

(30-ம் பக்கம் பார்க்க)

# அண்ணனே! வரமாட்டீரா?

கவிஞர்
கா.வேழவேந்தன்
பி.ஏ.,பி.எல்



1. அண்ணனே! எங்கள் நெஞ்சின்
அணையாத விளக்கே! நந்தம்
கண்ணான தமிழ்த்தாய் மானம்
காத்திட்ட மகனே! நீங்கள்
மண்ணிலே மறைந்தீர்; ஆனால்
மறையுமா நீங்கள் தந்த
எண்ணமும் எழுத்தும் பேச்சும்?
எப்படி மறப்போம் அண்ணா?

2. ஏழைக்குப் புன்சி ரிப்பை
ஏற்றிய சுடரே! இங்கே
கோழையும் நிமிரும் வண்ணம்
குரல்தந்த ஏறே! பூவில்
தாழைபோல் மணக்கும் எங்கள்
தங்கமே! நற்கற் பூரப்
பேழையாய் மிளிர்கின் றீர்கள்!
பிரிந்தாலும் வாழு கின்றீர்!

3. உருவமோ குறள்தான்! ஆனால்
உள்ளமோ ஆழி! வாழ்ந்தே
இருந்ததோ அறுப தாண்டே;
எத்தனைப் பணிமு டித்தீர்?
திருந்தாத உள்ள மெல்லாம்
திருத்திட மருந்து தந்தீர்!
வருந்தாதோர் எல்லாம் கூட
வருந்திட ஏன்ம றைந்தீர்?

4. கற்கண்டுப் பேச்சை நாங்கள்
காலமும் கேட்க வேண்டும்;
சொற்சுவை எழுத்தை நாங்கள்
தொடர்ந்திங்கே படிக்க வேண்டும்;
பொற்சுவைக் கருத்தை நாங்கள்
பொழுதுக்கும் சுவைக்க வேண்டும்;
நற்குலத் தலைவா! மீண்டும்
நடமாட வரமாட் டீரா?

(48-ம் பக்கம் தொடர்ச்சி)

| | தொகுதி | கழக வேட்பாளர் | முற்போக்கு கூட்டணி வேட்பாளர் | மாற்றுக் கட்சிகள் |
|---|---|---|---|---|
| 192 | குத்தாலம் | எஸ். கணேசன் | ,, | சிண்டி இ, கம் சுயே 1 |
| 193 | கொடவாசல் | பெரியசாமி | ,, | சிண்டி இ. கம் சுயே 1 |
| 194 | நன்னிலம் | தேவேந்திரன் | ,, | சிண்டி இ. கம் |
| 195 | திருவாரூர் | எம். கருணாநிதி | ,, | சிண்டி இ. கம் |
| 196 | நாகபட்டிணம் | ராஜமாணிக்கம் | ,, | சிண்டி இ. கம் |
| 197 | வேதாராண்யம் | மீனாட்சிசுந்தரம் | ,, | சிண்டி இ. கம் |
| 198 | திருத்துறைப்பூண்டி | இல்லை | மணலி கந்தசாமி வ. கம். | சிண்டி சுயே 1 |
| 199 | கோட்டூர் | ,, | ஏ. கே. சுப்பையா வ. கம். | சிண்டி |
| 200 | மன்னார்குடி | கு. பாலகிருட்டிணன் | ,, | சிண்டி இ. கம் சுயே 1 |
| 201 | ஒரத்தநாடு | எஸ். கணேசன் | ,, | சிண்டி சுயே 1 |
| 202 | கந்தர்வகோட்டை | கோவிந்தராசு | ,, | சிண்டி சுயே 1 |
| 203 | பட்டுக்கோட்டை | இல்லை | ஏ. ஆர். மாரிமுத்து பி சோ. | சிண்டி |
| 204 | பேராவூரணி | எம். கிருஷ்ணமூர்த்தி | இல்லை | சிண்டி சுயே 3 |
| 205 | அறந்தாங்கி | எஸ். ராமநாதன் | இல்லை | சிண்டி சுயே 1 |
| 206 | விளாத்திகுளம் | இரத்தினசபாபதி | இல்லை | சிண்டி சுயே |
| 207 | கோவில்பட்டி | இல்லை | எஸ். அழகிரிசாமி | சிண்டி |
| 208 | ஒட்டப்பிடாரம் | ,, | எஸ். முத்தையா | சுதந் சுயே2 |
| 209 | சங்கரன்கோவில் | எஸ். சுப்பையா | இல்லை | சிண்டி |
| 210 | வாசுதேவநல்லூர் | வெள்ளதுரை | ,, | சிண்டி |
| 211 | கடையநல்லூா | சுப்பையா | ,, | சிண்டி |
| 212 | தென்காசி | கதிரவன் (எ) சம்சுதீன் | ,, | சிண்டி |
| 213 | ஆலங்குளம் | வி. அருணாசலம் | ,, | சிண்டி |
| 214 | அம்பாசமுத்திரம் | அனந்தகிருஷ்ணன் | ,, | சிண்டி இ. க |
| 215 | சேரன்மாதேவி | இரத்தினவேல்பாண்டியன் | ,, | சுதந்திரா |
| 216 | கங்கைகொண்டான் | கருப்பையா | ,, | சிண்டி சுயே2 |
| 217 | திருநெல்வேலி | பி. பத்மநாபன் | ,, | சிண்டி |
| 218 | மேலப்பாளையம் | இல்லை | முகமதுகாதர்மொய்தீன் | சிண்டி சுயே3 |
| 219 | திருவைகுண்டம் | சி. பா. ஆதித்தனர் | இல்லை | சிண்டி சுயே6 |
| 220 | தூத்துக்குடி | இராமலிங்கம் | ,, | சிண்டி சுயே2 |
| 221 | திருச்செந்தூர் | எட்மண்ட் பி. ஏ. பி. எல் | ,, | சிண்டி சுயே1 |

(22-ம் பக்கம் பார்க்க)

# 'அண்ணா வாழ்வில்' அன்றொரு நாள்

சங்கரபிரகாச.

ஈரோட்டில் திராவிடர் கழகத்தின் தனிச் சிறப்பு மாநாடும், குறள் நெறி மாநாடும் பெரியார் அவர்களால் நடத்தப்பட்டது. அந்த மாநாட்டிற்கு நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார்கள். அந்த மாநாடு முடிந்ததும் மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கவும் மாநாட்டின் சிறப்பினை எடுத்துக் கூறவும் சென்னையில் ஐலண்டு மைதானத்தில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் பெரியார் அவர்களும் தமிழ்க்கடல் திரு வி. க. அவர்களும், அண்ணா அவர்களும் கலந்து உரையாற்றினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் அன்று ஆற்றிய உரை திரு. வி. க. அவர்களைக் கவர்ந்தது. மெய் மறந்து அவருடைய பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த திரு. வி. க. தாம் பேசும் போது குறிப்பிட்டார்.

''தமிழகத்தில் திரு. வி. க நடை'' ''திரு. வி. க. தமிழ்.'' ''திரு. வி. க. பாணி'' ''திரு. வி. க. எழுத்து'' என்று இன்று நிலவி வருவது மாறி இனி வருங்காலத்தில ''அண்ணாதுரை நடை'' ''அண்ணாதுரைபாணி'' ''அண்ணாதுரை எழுத்து'' என்றுதான் வரப் போகிறது. வருங்காலத்தில் தமிழ் மொழி சிதைந்து அழிந்து விடுமோ அதையார் காப்பாற்றப் போகிறார் கள் என்று நான் ஐயப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் நான் இனி நிம்மதியாகச் சாவேன். காரணம் அண்ணாதுரை தமிழின் உயர்வுக்காகச் சேவை செய்வதை என்னால் மறக்க முடியாது. அண்ணாதுரை ஒரு அரசியல் வாதி மட்டும் அல்ல; அவர் தாய் நாட்டையும் ''தாய்மொழியையும் காக்கும் தமிழர் தளபதி'' என்று திரு. வி. க. அவர்கள் கூறியதும் அங்கு கூடி இருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் கையொலி ஒலித்ததும் இன்னும் என் நெஞ்சத்தை விட்டு அகல வில்லை.

அன்று தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த அனுமான் பத்திரிக்கையின் ஆசிரியர் திரு. நாராயண ஐயங்கார் பேச எழுந்தார். அவர் பேசும்போது குறிப்பிட்டார்.

இன்று தமிழகத்தில் எழுத்தில் மறுமலர்ச்சியும் முற்போக்கு கருத்துக்களும் சீர்திருத்தக் கொள்கைகளும் அடிப்படையாகக் கொண்டு மேல்நாட்டு எழுத்தாளர்களும், கண்டு வியக்கும் வண்ணம் ஒருவர் ஈரோட்டில் இருந்து எழுதி வருகிறார் தெரியுமா? அவர் தான் அண்ணாத்துரை, அவரை இந்த மாநாட்டிற்கு அழைத்து இருக்க வேண்டும் அந்தக் குறையை நீக்குவதற்கு அடுத்த மாநாட்டிற்காவது அவரை அழைக்க வேண்டும் என கேட்டுக் கொள்வதோடு அண்ணாதுரையின் எழுத்து தமிழகத்தின் வாலிபர்களை எல்லாம் கவர்ந்துவிட்டது. தமிழ்நாட்டுமேடைகளில் எல்லாம் அவரது பாணி மிளிர்கிறது. தமிழில் பேசுவதற்கு வெட்கப்பட்டவர்கள் எல்லாம் தமிழில் பேசுவதை பெருமையாக எண்ணுகிறார்கள். அண்ணாதுரையும் அவரைச் சார்ந்தோரும் தமிழுக்காகவும், தமிழ் நாட்டுக்காவும் செய்து வரும் தொண்டினை மறக்க முடியாது.''



(20-ம் பக்கம் தொடர்ச்சி)

| | தொகுதி | கழக வேட்பாளர் | முற்போக்கு கூட்டணி வேட்பாளர் | மாற்றுக் கட்சிகள் |
|---|---|---|---|---|
| 222 | சாத்தான்குளம் | கந்தசாமி | ,, | சிண்டி சுயே 1 |
| 223 | நாங்குநேரி | கணபதி | ,, | சிண்டி |
| 224 | இராதாபுரம் | கார்த்திசன் | ,, | சிண்டி |
| **கன்யாகுமரி மாவட்டம்** | | | | |
| 225 | கன்னியாகுமரி | ராஜாபிள்ளை | இல்லை | சிண்டி சுயே 2 |
| 226 | நாகர்கோயில் | கிறிஸ்டோபர் | ,, | சுதந் இ. கம் |
| 227 | குளச்சல் | இரத்னராசு | ,, | சிண்டி சுயே 1 |
| 228 | பத்மநாபபும் | மைக்கேல் | ,, | சிண்டி இ. கம் |
| 229 | திருவெட்டாறு | ஞானசிகாமணி | ,, | சிண்டி இ. கம் |
| 230 | விளவங்கோடு | ஞானராசு கிறிஸ்டோபர் | ,, | சிண்டி இ. க சுயே |
| 231 | கிள்ளியூர் | இரசல்ராசு | ,, | சிண்டி சுயே 1 |
| **நீலகிரி மாவட்டம்** | | | | |
| 232 | கூடலூர் | இல்லை | புட்டா | சிண்டி இ. கம் |
| 233 | ஊட்டி | தேவராசன் | இல்லை | சுதந்திரா சுயே 4 |
| 234 | குன்னூர் | கருணாநாதன் | , | சிண்டி சுயே 3 ஜன |


**அஞ்சுகம் ஏட்டுக்கு வாழ்த்து**

குறைந்த செலவில் விரைந்து செல்வதற்கு
—சைக்கிள்

அவசர காரியங்களுக்கு உடனே செல்ல சைக்கிள்

உங்களுக்குத் தேவையான சைக்கிள்கள்
வாங்குவதற்குச் சிறந்த இடம்:

**நாகராஜன் சைக்கிள் மார்ட்!**

குறிப்பு- சைக்கிள்களை சிறந்த முறையில் செம்மை (ரிப்பேர்) செய்து தருவதற்கு நம்பகமான இடம்

**நாகராசன் சைக்கிள் மார்ட்**

**A. நாகராஜன்**

நாகராஜன் சைக்கிள்மார்ட்
கடம்பர்கோயில் கடைவீதி & பஸ்ஸ்டாண்ட்
குளித்தலை


## அறிவிப்பு

நமது அஞ்சுகம் இதழின் 49, 50 51 ஆகிய மூன்று இதழ்களும் சேர்ந்ததாகும். இந்தமலர்.

அடுத்த இதழ் 12—2—71 முதல் வெளிவரும். இரண்டாவது ஆண்டு தொடக்க இதழாக.

—ஆசிரியர்—

# 1967க்குப் பிறகு நான்கு ஆண்டுகளில்

| | |
|---|---|
| பசுமை புரட்சி செய்து பசி தீர்த்த ஆட்சி | தி. மு. கழக ஆட்சி |
| ஏழைகளுக்கு எரியாத வீடுகள் கட்டித்தந்து கொண்டிருப்பது | தி. மு. கழக ஆட்சி |
| நஞ்சை, புஞ்சை வரி நீக்கம் செய்தது | தி. மு. கழக ஆட்சி |
| உழவர்களுக்கு பட்டா நிலம் தந்தது | தி. மு. கழக ஆட்சி |
| தொழிலாளர் துயர்துடைத்து அவர்கள் துன்பம் குறைத்தது | தி. மு. கழக ஆட்சி |
| கல்லூரி புதுமுக வகுப்பு (பி. யு. சி.) வரை இலவசக் கல்வி தந்தது | தி. மு. கழக ஆட்சி |
| அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் ஊதிய உயர்வு தந்தது | தி. மு, கழக ஆட்சி |
| சேலம் இரும்பாலையைச் செயல்பட வைத்தது | தி. மு. கழக ஆட்சி |





| | |
|---|---|
| தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம் ஆக்கியது | தி. மு. கழக ஆட்சி |
| 72-ம் ஆண்டுக்குள் மின்சாரம் இல்லாத குக்கிராமமே, இல்லாமல் செய்ய தீவிரப் பணிபுரிவது | தி. மு. கழக ஆட்சி |
| பட்டிதொட்டி யெல்லாம் குடிநீர் கிடைக்க வழிவைத்திருப்பது | தி. மு. கழக ஆட்சி |
| மக்கள் சென்று காத்திருந்து அதிகாரிகளை காணும் முறையை மாற்றி அதிகாரிகளேசென்று மக்களை சந்திக்க செய்தது | தி. மு. கழக ஆட்சி |
| பிற்படுத்தப்பட்டோர் நலம் காப்பது | தி. மு. கழக ஆட்சி |
| இந்தி மொழிக்கு இங்கு இடமில்லை தமிழும், ஆங்கிலமும்தான் எனச்செய்தது | தி. மு. கழக ஆட்சி |
| மண்குடிசை வாசிகளை மாளிகைக்கு குடியேற்றுவது | தி. மு. கழக ஆட்சி |
| வியாபாரிகளுக்கு வரி விளக்கு அளித்தது | தி. மு. கழக ஆட்சி |
| மரமேறும் தொழிலாளர்களுக்கு நிவாரணஉதவிதந்தது | தி. மு. கழக ஆட்சி |
| மீனவர்களுக்கு பாதுகாப்பு உதவி அளித்தது | தி. மு. கழக ஆட்சி |
| எங்கும் தமிழ் எதிலும் தமிழ் எனச்செயல்படுவது | தி. மு. கழக ஆட்சி |

| | |
|---|---|
| வீராணம் முதல் கூவம் வரை சீரமைப்புத் திட்டங்கள் தீட்டி தீவிரச் செயல்படுவது | தி. மு. கழக ஆட்சி |
| வெள்ளத்தால் பாதிக்காத வீடுகள் ரூபாய் நாற்பது கோடி செலவில் கட்டி தர வீட்டுவசதி வாரியம் செயல்பட வைத்தது | தி. மு. கழக ஆட்சி |
| கொடியோர் செயலால் குடிசை எரிந்திட ஏழைகள் ஏங்கினர் அந்த ஏக்கந் தவிர்த்திட எரியாத வீடு அமைத்துத் தந்துகொண்டிருப்பது | தி. மு. கழக ஆட்சி |
| அரிசி கடைமுன் நீண்ட க்யூ வரிசை காத்திருந்தும் 'அரிசி இல்லை' யென்ற அவல நிலையை மாற்றி அரிசி எங்கும் கிடைக்கச் செய்தது, | தி. மு. கழக ஆட்சி |
| அண்ணா வழிநடக்கும் அரசு | தி. மு. கழக ஆட்சி |

## மக்கள் தொண்டாற்ற

## உங்களை நாடிவருகிறது தி. மு. க.

## ஆதரிப்பீர்

# உதய சூரியன்

# நாடாளும் மன்றம்

## தேர்தல் நாள் 1—3—71

| தொகுதி | கழக வேட்பாளர் | முற்போக்கு கூட்டணி வேட்பாளர் | மாற்றுக் கட்சிகள் |
|---|---|---|---|
| 1. வடசென்னை | திரு. கி. மனோகரன் M.A., | இல்லை | சிண்டி சுயே. 2 |
| 2. தென்சென்னை | ,, முரசொலிமாறன் M.A., | ,, | சுதந். |
| 3. திருப்பெரும்புதூர் | ,, டி. எஸ். லட்சுமணன் | ,, | சிண்டி |
| 4. செங்கற்பட்டு | ,, சி. சிட்டிபாபு | ,, | சிண்டி சுயே 2 |
| 5. திருத்தணி | இல்லை | ஓ. வி, அளகேசன் ஆ. கா. | சிண்டி |
| 6. திண்டிவனம் | ,, | எம். ஆர். லட்சுமிநாராயண ஆ. கா. | சுதந் சுயே |
| 7. சிவகங்கை | திரு. கிருஷ்ணன் | இல்லை | சிண்டி |
| 8. இராமநாதபுரம் | இல்லை | பி. கே. மூக்கையா தேவர் பார்வார்டு பிளாக் | சிண்டி சுயே |
| 9. சிவகாசி | ,, | ஜயலட்சுமி ஆ. கா. | சுதந் சுயே |
| 10. திருநெல்வேலி | ,, | எஸ். ஏ. முருகானந்தம் வலது. கம். | சுதந் சுயே |
| 11. தென்காசி | ,, | அம்மன்குளம் செல்லசாமி ஆ. காங். | சிண்டி சுயே |
| 12. திருச்செந்தூர் | M. S. சிவசாமி | இல்லை | சுதந் சுயே |
| 13. நாகர்கோயில் | எம். சி. பாலன் | இல்லை | சிண்டி இ. கம் சுயே |

## நாள் 4—3—71

| தொகுதி | கழக வேட்பாளர் | முற்போக்கு கூட்டணி வேட்பாளர் | மாற்றுக் கட்சிகள் |
|---|---|---|---|
| 14. வேலூர் | ஆ. பி. உலகநம்பி | இல்லை | சிண்டி சுயே |
| 15. திருப்பத்தூர் | சி. கே. சின்னராசு | ,, | சுதந்தி |
| 16. சிதம்பரம் | வி. மாயவன் | ,, | சிண்டி சுயே |
| 17. கள்ளக்குறிச்சி | எம். தெய்வீகன் | ,, | சிண்டி |
| 18. கிருஷ்ணகிரி | இல்லை | டி. எம். தீர்த்தகிரி ஆ. கா. | சுதந்தி |
| 19. சேலம் | ஈ. ஆர். கிருஷ்ணன் | இல்லை | சிண்டி ஜனசங் சுயே |
| 20. நீலகிரி | மாதா கவுடர் | ,, | சிண்டி |
| 21. பொள்ளாச்சி | உடுமலை நாராயணன் | ,, | சிண்டி இடது கம் |
| 22. தாராபுரம் | சி. டி. தண்டபாணி | ,, | சிண்டி |
| 23. கரூர் | இல்லை | கே. கோபால் ஆ. காங் | சிண்டி |
| 24. திருச்சி | இல்லை | எம். கல்யாணசுந்தரம் வலது. கம் | இடது கம் சிண்டி |

| தொகுதி | கழக வேட்பாளர் | முற்போக்கு கூட்டணி வேட்பாளர் | மாற்றுக் கட்சிகள் |
|---|---|---|---|
| 25. புதுக்கோட்டை | கே. வீரையா | இல்லை | சிண்டி |
| 26. மாயூரம் | கே. சுப்ரவேலு | இல்லை | சிண்டி |
| 27. வந்தவாசி | ஜி. விசுவநாதன் | இல்லை | சிண்டி<br>சுயே 2 |
| 28. கடலூர் | இல்லை | எஸ். இராதாகிருஷ்ணன்<br>ஆ. கா. | சிண்டி |
| 29. மேட்டூர் | ,, | பூவராகன் ஆ. கா. | சிண்டி |
| 30. திருச்செங்கோடு | எம். முத்துசாமி<br>பீ. ஏ. பி. டி., | இல்லை | சிண்டி<br>சுயே |
| 31. கோயம்புத்தூர் | இல்லை | கே. பாலதண்டாயுதம்<br>வலது. கம் | சிண்டி<br>இடது கம் |
| 32. கோபிசெட்டிபாளையம் | பி. ஏ. சாமிநாதன் | இல்லை | சிண்டி |
| 33. பெரியகுளம் | இல்லை | எஸ். எம். ஷெரீப்<br>மு. லீக் | சுதந்<br>சுயே 3 |

**நாள் 7—3—71**

| தொகுதி | கழக வேட்பாளர் | முற்போக்கு கூட்டணி வேட்பாளர் | மாற்றுக் கட்சிகள் |
|---|---|---|---|
| 34. திண்டுக்கல் | எம். ராஜலிங்கம் | இல்லை | சுதந்தி<br>சுயே |
| 35. மதுரை | இல்லை | ஆர். வி. சுவாமிநாதன்<br>ஆ. கா. | சிண்டி<br>இ. கம்<br>சுயே |
| 36. கும்பகோணம் | இரா. செழியன் M. A. | இல்லை | சிண்டி |
| 37. பெரம்பலூர் | ஏ. துரைராசு | இல்லை | சிண்டி |
| 38. நாகப்பட்டிணம் | இல்லை | எம். காத்தமுத்து<br>வலது. கம் | சிண்டி<br>இ. கம் |
| 39. தஞ்சாவூர் | எஸ். டி. சோமசுந்தரம் B,E. | இல்லை | சிண்டி<br>சுயே 2 |

## சட்டமன்றம்

| | | | |
|---|---|---|---|
| 1. வண்ணாரப்பேட்டை | எம். வேதாசலம் | இல்லை | சிண்டி<br>சுயே 1 |
| 2. துறைமுகம் | இல்லை | ஏ. எம். மொகிதீன்<br>லீக் | சிண்டி<br>சுயே 2 |
| 3. பேசின்பிரிட்ஜ் | எம். ஆர். கண்ணன் | இல்லை | சிண்டி<br>இ. கம் |
| 4. பார்க்டவுன் | ஏ. வி. பி. ஆசைத்தம்பி | ,, | சுதந்திரா |
| 5. பெரம்பூர் | சத்தியவாணிமுத்து | ,, | சிண்டி<br>சுயே 1 |
| 6. புரசைவாக்கம் | க. அன்பழகன் எம், ஏ. | ,, | சிண்டி<br>சுயே 1 |
| 7. எழும்பூர் | இராம. அரங்கண்ணல் | ,, | சிண்டி |
| 8. ஆபிரம்விளக்கு | கே, ஏ. மதியழகன் பி. ஏ. | ,, | சிண்டி<br>சுயே 4 |
| 9. திருவல்லிக்கேணி. | இரா. நெடுஞ்செழியன் எம் ஏ. | ,, | சிண்டி<br>சுயே. 2 |

| | தொகுதி | கழக வேட்பாளர் | முற்போக்கு கூட்டணி வேட்பாளர் | மாற்றுக் கட்சிகள் |
|---|---|---|---|---|
| 10. | மயிலாப்பூர் | இல்லை | ம. பொ. சிவஞானம் த. கழகம் | சிண்டி |
| 11 | தியாகராயநகர் | டி. வி. நாராயணசாமி | இல்லை | சிண்டி சுயே 2 |
| 12 | சைதாப்பேட்டை | கலைஞர் மு. கருணாநிதி | ,, | சிண்டி சுயே. 3 |

## செங்கல்பட்டு மாவட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | கும்மிடிப்பூண்டி | கா. வேழவேந்தன் B.A,B.L. | இல்லை | சிண்டி |
| 14 | பொன்னேரி | பி. நாகலிங்கம் | ,, | சிண்டி சுயே 1 |
| 15 | திருவொற்றியூர் | எம், வி. நாராயணசாமி | ,, | சிண்டி |
| 16 | பரங்கிமலை | மக்கள் திலகம் எம், ஜி. இராமச்சந்திரன் | ,, | சிண்டி சுயே 1 |
| 17 | திருப்போரூர் | முனு ஆதி | ,, | சிண்டி சுயே 3 |
| 18 | செங்கல்பட்டு | ஜி. விசுவநாதன் | ,, | சிண்டி சுயே 6 |
| 19 | மதுராந்தகம் | இ. ஆறுமுகம் | ,, | சிண்டி |
| 20 | அச்சரப்பாக்கம் | வி. பாலசுந்தரம் | ,, | சிண்டி சுயே 3 |
| 21 | உத்திரமேரூர் | கே. எம். ராஜகோபாலன் | | சிண்டி சுயே 1 |
| 22 | காஞ்சிபுரம் | சி. வி. எம். அண்ணாமலை | ,, | சிண்டி இ, க |
| 23 | குன்னத்தூர் | ஆர். கோபால் | ,, | சிண்டி சுயே 1 |
| 24 | கடம்பத்தூர் | ஏ. பரந்தாமன் | ,, | சிண்டி |
| 25 | திருவள்ளூர் | எஸ். எம், துரைராசு | ,, | சிண்டி சுயே 1 |
| 26 | திருத்தணி | இல்லை | இ. எஸ், தியாக ராஜன் த. கழகம் | சிண்டி |
| 27 | ஸ்ரீபெரும்புதூர் | டி. ராஜரெத்தினம் | இல்லை | சிண்டி |

## கோயம்புத்தூர் மாவட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| 28 | கோவை கிழக்கு | கே. அரங்கநாதன் | இல்லை | சிண்டி இ. க 1 |
| 29 | கோவை மேற்கு | பி. கோபால் | ,, | சுதந்திரா இ. க சுயே 1 |
| 30 | பேரூர் | இல்லை | என். மருதாசலம் வ. கம் | சிண்டி இ, கம் |
| 31 | தாராபுரம் | வி. பி. பழனியம்மாள் | இல்லை | சிண்டி சுயே 1 |
| 32 | வெள்ளகோயில் | எம். பழனிச்சாமி | ,, | விவசா ச, சுயே 2 |
| 33 | தொண்டாமுத்தூர் | ஆர். ஏ. மாணிக்கவாசகம் | ,, | விவசா ச. சுயே 1 |

| | தொகுதி | கழக வேட்பாளர் | முற்போக்கு கூட்டணி வேட்பாளர் | மாற்றுக் கட்சிகள் |
|---|---|---|---|---|
| 34 | சிங்காநல்லூர் | இல்லை | ஏ. சுப்பிரமணியம் பி.சோ | சிண்டி இ. க சுயே 1 |
| 35 | மேட்டுப்பாளையம் | எம். சி. தூயமணி | இல்லை | விவ. ச. |
| 36 | அவிநாசி | கே. தங்கவேலு | ,, | விவ. ச. சுயே 1 |
| 37 | கோபிசெட்டிபாளையம் | என். எம். பழனியப்பன் | ,, | சுதந்திரா சுயே 2 |
| 38 | அந்தியூர் | எம். நடராசன் | ,, | சிண்டி |
| 39 | சத்தியமங்கலம் | எஸ். கே. சுப்பிரமணியம் | ,, | சிண்டி இ. கம் |
| 40 | காங்கேயம் | கோவை செழியன் | ,, | வி. ச சுயே 1 |
| 41 | பொங்கலூர் | என். பழனிச்சாமி | ,, | எஸ். எஸ் பி சுயே 1 |
| 42 | பவாணி | ஏ. எம். ராஜா | ,, | சிண்டி சுயே 1 |
| 43 | பவானிசாகர் | எம். என். ராமராசன் | ,, | சிண்டி சுயே 2 |
| 44 | ஈரோடு | எம். சுப்பிரமணியம் | ,, | சிண்டி |
| 45 | பொள்ளாச்சி | எ, டி. சண்முகசுந்திரம் | ,, | விவ. ச சுயே 1 |
| 46 | கிணத்துக்கடவு | எம். கண்ணப்பன் | ,, | விவ. ச. |
| 47 | பல்லடம் | இல்லை | கே. எம். குமாரசாமி பி. சோ | சிண்டி இ: க |
| 48 | மொடக்குறிச்சி | எம். சின்னசாமி | இல்லை | எஸ். எஸ் பி |
| 49 | வால்பாறை | இ. இராமசாமி | ,, | சிண்டி சுயே 3 |
| 50 | உடுமலைப்பேட்டை | சாதிக்பாட்சா பீ,ஏபி. எல். | ,, | விவ, சங் சுயே 2 |
| 51 | திருப்பூர் | எஸ், துரைசாமி | ,, | விவ, ச சுயே 1 |
| 52 | பெருந்துறை | இல்லை | என். கே. பழனிச்சாமி வ. கம்யூ | விவ ச |

## மதுரை வட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| 53 | ஒட்டன்சத்திரம் | என். நாச்சிமுத்து | இல்லை | சிண்டி சுயே 1 |
| 54 | பழனி | சி. பழனிசாமி | ,, | சிண்டி இ, கம், |
| 55 | போடிநாயக்கனூர் | எம். சுருளிவேல் | இல்லை | சுயே 1 |
| 56 | கம்பம் | எஸ். செல்லதுரை | ,, | சிண்டி இ கம் |
| 57 | ஆண்டிப்பட்டி | இல்லை | எஸ். பாமசிவம் பார்வாட் பிளாக் | சுதந் சுயே 2 |
| 58 | சேடபட்டி | ,, | தவமணித் தேவர் பார்வார்டு பிளாக் | சுதந் சுயே 2 |

(33-ம் பக்கம் பார்க்க)




(18 ம் பக்க தொடர்ச்சி)

அந்தத் திட்டக்குழு, தமிழக எதிர்கால வளத்திற்கான பத்து ஆண்டுத் திட்டத்தைத் தயாரிக்கும்.

இதன் காரணமாக மத்திய — மாநிலப் பூசல் உருவாகுமென்று யாரும் அஞ்சத் தேவையில்லை. ஏனெனில் 'திட்டமிடுதல்' நமது அரசியல் திட்டத்தில் கூட்டுப் பட்டியலில் (Concurrent List) இருப்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

அப்பட்டியலில் 'சமுதாய, பொருளாதாரத் திட்டமிடுதல்' (Economic and Social Planning) மத்திய-மாநில அரசுகளின் அதிகாரத்திற்குட்பட்டது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால் மத்திய அரசு பொருளாதாரத் திட்டம் தீட்டுவதற்குத் திட்டக் குழுவினை அமைத்ததே தவிர, சமுதாய வளர்ச்சித் திட்டம் (Social Planning) கவனிப்பற்ற துறையாக இருக்கிறது.

சமுதாய - கலாச்சார நோக்கில் தேவையான மாறுதல் ஏற்படாவிட்டால் அது பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாகாது என்பது தற்கால வல்லுநர்களின் கருத்தாக இருக்காது.

நாம் உருவாக்க நினைக்கிற திட்டக் குழு சமுதாய – பொருளாதார வளர்ச்சிக்கான (Social & Economic) திட்டக் குழுவாக இருக்கும்.

இந்திய அரசின் லைசென்ஸ் முறை, தாமதத்திற்கான இலட்சிய உதாரணமாகச் செயல்படுவதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

மாநிலங்களுக்கான பங்கினையும், அதற்குரியவெளிநாட்டுச் செலவாணியையும் ஒதுக்கி விட்டு; அகில இந்தியப் பிரச்னை குறித்த கண்காணிப்பை மட்டும் மத்திய அரசு வைத்துக் கொண்டு; லைசென்ஸ் வழங்கும் முறையை மாநிலங்களுக்கு வழங்குவதே மாநிலத் தொழில் வளர்ச்சிக்கு உதவும் வழி என்று நாம் கருதுகிறோம்.

தொழில்துறை உற்பத்தியைப் பெருக்கிட அமைப்பு இருப்பது போல, விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கும் ஒரு அமைப்பை (Agricultural Productivity Council) உண்டாக்க கழகம் விரும்புகிறது.

விவசாய விளைபொருள்களை விற்பனை செய்துதர உதவிடும் அமைப்பைப்போல, சிறுதொழில் உற்பத்தியாளர்களுக்கு உதவிட ஒரு அமைப்பு (Industrial Marketing Society) நிறுவிட கழகம் விரும்புகிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வகையில் நான்காவது திட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்று கருதுகிறோம்.

பெரிய தொழில்களோடு, சிறு தொழில் வளர்ச்சி கிராமப்புற வேலையில்லாத் திண்டாட்டத்தையும் நீக்க உதவும் என்று கருதுகிறோம்.

சிறு தொழில்களை அமைக்க சிறந்த வாய்ப்புகள் இருப்பினும் போதிய நிதி வசதி இன்மையால் பலர் இதற்கு முன் வரவில்லை.

இக்குறையைத் தீர்க்க தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி வாரியத்தை உருவாக்கியிருக்கிறோம்.

இதன் பணியைத் தீவிரப்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு குழுவினை அமைக்க உத்தேசித்திருக்கிறோம்.

சிறு கடை வைப்பது - சிறு வியாபாரம் நடத்துவது-ஆகியவையும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க உதவும்.

சிறுகடை வைக்க முனைவோருக்கும், சிறுதொழில் நடத்த முனைவோருக்கும் போதியநிதி வசதிகளையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்க; சிறு தொழில் — சிறு வியாபார உதவி வாரியம் அமைக்க உத்தேசித்திருக்கிறோம்.

விஞ்ஞான யுகத்திற்கேற்ற சமதர்ம சமுதாய அமைப்பில் முக்கியமாக நமது கவனத்தைக் கவர்கிறவர்கள், சமுதாயத்தின் அடித்தளத்திலே வாய்ப்பு வசதிகளின்றி இருக்கின்ற பின் தங்கிய சமூகத்தவரும்; தாழ்த்தப்பட்ட மக்களுமாவர்.

அவர்களைக் கைதூக்கிவிடக் கழக அரசு எடுத்துள்ள முயற்சிகளை நாடறியும்.

"சுதந்திரமாக இயங்கும் ஒரு சமுதாயம் தொகையில் பலராக உள்ள வசதியற்றவர்களுக்கு உதவ முடியவில்லையென்றால் அந்த சமுதாயத்தால் தொகையில் சிலராக இருக்கும் வசதி உள்ளவர்களையும் காப்பாற்ற இயலாது"

—என்று குடியரசுத் தலைவர் பதவி ஏற்ற நாளில் ஜான் எப். கென்னடி கூறியதை சமுதாயத்தின் மேல் தளத்தில் இருப்பவர்களும் ஒப்புக்கொள்வார்கள் எனக் கருதுகிறோம்.

ஆகவே, நாட்டில் பெரும்பங்கு இடம்பெறும் குடிசைகளிலும் கிராமங்களிலும் துன்பத்தில் ஆழ்ந்து வருந்தும் மக்களுக்கு எத்தனை ஆண்டு காலத்திற்குத் தேவைப்பட்டாலும் உதவிபுரிவோம் என்ற உறுதியைக் கழகம் எடுத்துக்கொண்டுள்ளது.

எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்ற நினைவோடு பணியாற்றுகின்ற எந்தக் கட்சியுடனும் கழகத்திற்கு நட்புறவு உண்டு. அது தேர்தல் உறவாக இல்லாமல்கூட இருக்கலாம். ஆனால் கொள்கை உறவாக நிச்சயம் இருக்கும். எல்லாரும் மன்னரல்ல; இருநூறு பேரே மன்னரெனக் கூறி சந்தர்ப்பவாதக் கூட்டுக்களின் மூலம், பதவி பிடிப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு கொள்கையைக் காற்றில் பறக்கவிடும் பிற்போக்கு சக்திகளை ஜனநாயக ரீதியில் முறியடிப்பதைக் கழகம், ஒரு அறப்போராட்டமாகவே கருதுகிறது.

இந்தி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்துவதை, தமிழைப் போற்றுவதை, கழகம், தான் பிறவியெடுத்ததற்கான காரணங்களில் ஒன்றாகக் கருதுகிறது.







இந்திய ஒருமைப்பாட்டையும், அண்டை மாநிலங்களோடு தோழமையையும் விரும்புகிற அதே நேரத்தில் தமிழ்நாட்டுக்கு ஊறு விளைவிக்கிற நிலைமையில் 'ஹேமவதி' போன்ற அணைகள் கட்டப்படுவதை எதிர்த்து, தனது நியாயத்தை நிலைநாட்டி வெற்றி பெறுவதில் கழகம், மிகுந்த உறுதியோடு இருக்கிறது.

வியர்வை கொட்டப் பாடுபடும் விவசாயிகள், தொழிலாளர்கள், வசதியற்ற நிலையில் தங்கள் தொழிலை நடத்தும் முடிதிருத்துவோர், சலவையாளர், இன்னோரன்ன பாட்டாளி மக்களுக்கும் சமுதாயத்தின் அடித்தளத்தில் அவதிப்படுவோருக்கும், நடுத்தர வர்க்கத்தினருக்கும், படிப்படியாக வசதிகளை அளிக்கக் கழகம் சபதம் ஏற்றுகொள்கிறது.

தொழிலாளர் கிளர்ச்சியாயினும், மாணவர் கிளர்ச்சியாயினும், விவசாயிகள் கிளர்ச்சியாயினும் கிளர்ச்சி நடத்துவோரைப்பற்றி சிந்திக்காமல், கிளர்ச்சியின் காரணத்தை உணர்ந்து. அவைகளில் வீண் கௌரவப்பிரச்னை பார்க்காமல் அவர்தம் முறையீடுகளுக்குச் செவிசாய்த்து, நியாயமெனப் பட்டதைச் செய்வதற்குத் தயக்கம் காட்டத்தேவையில்லை யென்பதே கழகம் தொடர்ந்து கடைப்பிடிக்க விரும்பும் பண்பாகும்.

உங்கள் கழகம். நீங்கள் தந்த அரசுப் பொறுப்பை நான்காண்டு காலம் நல்லமுறையில் ஏற்று நடத்தி, விட்ட பணிகளைத் தொடரவும், புதிய பணிகளைத் தொடங்கவும் உங்கள் அன்பான ஆதரவை எதிர்பார்த்து ஊழியம் புரியக் காத்து நிற்கிறது. உத்தரவிடுங்கள்! உங்கள் வீட்டுப் பிள்ளைகள் உலவும் பாசறை தி. மு. க!

**தி. மு. க. நாட்டுக்குத் தொண்டன்!**

**வீட்டுக்கு விளக்கு !**

**தொண்டு வென்றிட: விளக்கொளி நிலைத்திட வாழ்த்தி, வரவேற்று, வெற்றி குவிப்பீர் !**

★



(29-ம் பக்கம் தொடர்ச்சி)

| | தொகுதி | கழக வேட்பாளர் | முற்போக்கு கூட்டணி வேட்பாளர் | மாற்றுக் கட்சிகள் |
|---|---|---|---|---|
| 59 | திருமங்கலம் | ,, | என். இ. எ. இரத்தின சாமித்தேவர் பார்வார்டு பிளாக் | சிண்டி |
| 60 | நிலக்கோட்டை | ஏ. முனியாண்டி | இல்லை | சிண்டி |
| 61 | சோழவந்தான் | பி. எஸ். மணியம் பி. ஏ. பி. எல். | ,, | சுயே 1 சிண்டி சுயே 1 |
| 62 | திருப்பரங்குன்றம் | சி. காவேரி மணியன் பி.ஏ.பி.எல். | ,, | சிண்டி இ. கம் சுயே 1 |
| 63 | மதுரை மேற்கு | இல்லை | கே. டி. கே. தங்கமணி வ. கம்யூ | சிண்டி இ. கம் |
| 64 | மதுரைமத்தி | கே. திருப்பதி பி.ஏ.பி.எல். | இல்லை | சிண்டி இ. கம் சுயே 1 |
| 66 | மதுரைகிழக்கு | எம். கே. எஸ். இராமகிருஷ்ணன் | இல்லை | சிண்டி இ. கம் ஜனச |
| 67 | மேலூர் தெற்கு | ஓ. பி. ராமன் பி. ஏ. பி. எல் | ,, | சிண்டி சுயே 1 |
| 68 | மேலூர் வடக்கு | பி. மலைச்சாமி | ,, | சிண்டி |
| 69 | வடமதுரை | கே. நாகராசன் | ,, | சிண்டி |
| 70 | வேடசந்தூர் | பி, முத்துசாமி | ,, | சிண்டி இ. கம் |
| 71 | பெரியகுளம் | அன்புச்செழியன் எம். ஏ. | ,, | சிண்டி சுயே 1 |
| 72 | தேனி | பழனிவேல்ராஜன் | ,, | சிண்டி |
| 73 | உசிலம்பட்டி | இல்லை | மூக்கையதேவர் | சுயே 1 |
| 74 | திண்டுக்கல் | ,, | ஜமால் உசேன் மு. லீ. | சிண்டி இ. கம் |
| 75 | ஆத்தூர் | நாச்சியப்பன் | இல்லை | சிண்டி சுயே. 1 |

## வடஆற்காடு மாவட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| 76 | குடியாத்தம் | ஏ. கே. துரைசாமி | இல்லை | சிண்டி சுயே1 இட க |
| 77 | காட்பாடி | துரைமுருகன் | ,, | சிண்டி இட கம் சுயே |
| 78 | வாணியம்பாடி | இல்லை | எம். ஏ.லத்தீப் மு. லீக். | சிண்டி சுயே 2 |
| 79 | ஆற்காடு | என். வீராசாமி | இல்லை | சிண்டி சுயே3 |
| 80 | வேலூர் | எம். பி. பார்த்தசாரதி | ,, | சிண்டி சுயே2 |
| 81 | கணியம்பாடி | டி. திருவேங்கடம் | ,, | சிண்டி சுயே3 |
| 82 | ஆரணி | ஏ. இ, நரசிம்மன் | ,, | சிண்டி |
| 83 | போளூர் | டி. பி. சீனிவாசன் | ,, | சிண்டி |

| | தொகுதி | கழக வேட்பாளர் | முற்போக்கு கூட்டணி வேட்பாளர் | மாற்றுக் கட்சிகள் |
|---|---|---|---|---|
| 84 | செங்கம் | சி. பாண்டுரங்கம் | ,, | சிண்டி<br>சுயே 1 |
| 85 | பேரணாம்பட்டு | என். கிருஷ்ணன் | ,, | சிண்டி<br>சுயே 2 |
| 86 | ஆம்பூர் | எம். பன்னீர்செல்வம் | ,, | சிண்டி<br>சுயே |
| 87 | பெரணமல்லூர் | எட்டியப்பன் | ,, | சிண்டி |
| 88 | கலசப்பாக்கம் | எஸ், முருகையன் | ,, | சிண்டி |
| 89 | ராணிபேட்டை | இல்லை | கே. ஏ. வகாப் | சிண்டி |
| 90 | அரக்கோணம் | என். எஸ். பலராமன் | இல்லை | சிண்டி<br>சுயே 1 |
| 91 | சோளிங்கபுரம் | கே. எம். நடராசன் | ,, | சிண்டி |
| 92 | நாட்ராம்பள்ளி | திம்மராயன் | ,, | சிண்டி |
| 93 | திருப்பத்தூர் | ஜி. இராமசாமி | ,, | சிண்டி |
| 94 | செய்யாறு | புலவர் கோவிந்தசாமி | ,, | சிண்டி |
| 95 | வந்தவாசி | வி. ராஜகோபால் | ,, | சிண்டி |
| 96 | தண்ட்ராம்பட்டு | இராதாகிருட்டிணன் | ,, | சிண்டி |
| 97 | திருவண்ணாமலை | ப. உ. சண்முகம் | ,, | சிண்டி |

## இராமநாதபுரம் மாவட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| 98 | திருப்பத்தூர் | செ. மாதவன் | இல்லை | சிண்டி |
| 99 | காரைக்குடி | சிதம்பரம் | ,, | சிண்டி |
| 100 | திருவாடானை | பெரி. சண்முகம் | ,, | சுதந்<br>சுயே 1 |
| 101 | இளையாங்குடி | வி. மலைக்கண்ணன் | ,, | சிண்டி<br>சுயே 3 |
| 102 | முதுகுளத்தூர் | இல்லை | இரத்தினதேவர்<br>பா. பி. | சிண்டி<br>சுயே 3 |
| 103 | பரமக்குடி | சிறை மீட்டான் | இல்லை | சிண்டி<br>சுயே 1 |
| 104 | காரியாப்பட்டி | இல்லை | ஏ. ஆர். பெருமாள்<br>பா. பி. | சிண்டி<br>சுயே 2 |
| 105 | அருப்புக்கோட்டை | ,, | சௌடிசுந்தரபாரதி<br>பா. பி. | சுதந்தி<br>சுயே 1 |
| 106 | விருதுநகர் | பி. சீனிவாசன் | இல்லை | சுதந்திரா<br>சுயே 4 |
| 107 | சாத்தூர் | இல்லை | எஸ் அழகுத்தேவர்<br>பா. பி. | சுதந்தி<br>சுயே 4 |
| 108 | சிவகாசி | கே. காளிமுத்து | இல்லை | சுதந்தி<br>சுயே 2 |
| 109 | சிவகங்கை | சி. சேதுராமன் | ,, | சுதந்தி<br>சுயே 2 |
| 110 | மானாமதுரை | டி. சோனையா | ,, | சிண்டி |
| 111 | திருவில்லிப்புத்தூர் | குருசாமி என்கிற ஆண்டி | ,, | சிண்டி |
| 112 | இராசபாளையம் | இல்லை | கே. சுப்பு | சிண்டி |
| 113 | இராமநாதபுரம் | சத்யேந்திரன் | இல்லை | சிண்டி<br>சுயே 2 |
| 114 | கடலாடி | இராமலிங்கம் | ,, | சுதந்தி<br>சுயே 4 |

(45-ம் பக்கம் பார்க்க)



# திருவார்ந்த அண்ணா

'கவித்தென்றல்' மா. வரதராஜன்

வசைப்பாட்டே அரசியலில் மலிந்திருந்த
கெடுநீங்க யார்முயன்றார்? இல்லை! இல்லை!
வசப்பட்டே அரசியலில் கீழ்மை செய்த
வம்பர்களின் வழியெல்லாம் மாறவேண்டி
இசைப்பாட்டுப் பேச்சாலே இதபந்தன்னை
ஈர்த்தவனை அண்ணாவை மறப்பதுண்டோ?
திசைஎல்லாம் புகழதனைத் தேக்கிக்கொண்ட
திருவார்ந்த அண்ணாவைப் போற்றுவோமே.

கல்கியார் அண்ணாவைப் புகழ்ந்தபோது
கலைத்துறையில் பெர்னாட்ஷா என்றே சொன்னார்
பல்விதத்தில் வேற்றுமைகள் இருந்தபோதும்
பண்பினையும் திறமையையும் புகழவேண்டும்
கல்வியிலே மிகச்சிறந்த அண்ணா இந்தக்
கனிவான கொள்கையினை உணர்ந்ததாலே
எல்லோர்க்கும் இனியவனாய் இருந்ததோடு
எல்லையிலாப் பெரும்புகழை ஏற்கலானான்.







வெற்றிகுவித்திடும் என் தம்பியே விரலுக்குக் கணையாழி
பெற்றுக்கொள்! என்றணிந்தார் கணையாழியை



சிந்தனை தரும் சிரிப்பில் பேசிடும் பேச்சு உரைத்திடும் உரை
சிந்தனை நிறைந்ததாக தந்திடும் அறிஞர் அண்ணா






# ஈங்கோய்மலை இயற்கை எழில்

இயற்கையில் தோய்ந்து இனிய கவிதைகள் படைப்பதில் தமிழ்ப் புலவர்கட்கு ஈடாகத் தரணியில் வேறெங்கும் காண்பது அரிது. பண்டைத் தமிழர்கள், நிலத்தைக் குறிஞ்சி. முல்லை, மருதம், நெய்தல் என நால்வகையாகப் பாகுபாடு செய்தனர். முல்லையும் குறிஞ்சியும் வளமிழந்து மயங்கிய பகுதி பாலை என்றுரைக்கப்படும். இந்நிலங்களின் தன்மைகளையும், அங்கு வாழும் மக்களின் பண்புகளையும் எடுத்துரைக்கும் நூல்கள் பற்பல.

'ஈங்கோய்மலை எழுபது' என்னும் அரிய நூல் ஒன்று உண்டு. அதை இயற்றியவர் நக்கீரதேவர். அந்நூலைப் படிக்கும்போது குறிஞ்சி நிலப்பாங்கு முழுவதையும் நம்மால் அறிய முடிகிறது. ஈங்கோய் மலை, திருச்சி மாவட்டத்தில் காவிரியின் வடகரையில், திருச்சியிலிருந்து 26 கல் (42 கி. மீ.) தொலைவில் இருகிறது. ஈங்கோய்மலை எழுபதில் கூறியுள்ள இயற்கை வளத்தை நாம் இன்று அங்குக்காண முடியவில்லை. ஆயினும் அதன் பண்டைய வளத்தை அறியும்போது மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்கிறோம். இனி, அம் மலைவளத்தை நூல்வழிக் காண்போம்!

ஈங்கோய், மலர்க்காட்டால் கமழ்கிறது. வண்டுகள் மலர்களில் நுழைந்து தேனுண்டு திளைக்கின்றன. அவைகள் அளவுக்கு மிஞ்சி உண்டமையால் தேனையும் வெறுக்கின்றன. எனவே பூக்களிலிருந்து விடுபட்டு, யாழ்போன்ற ஒலியையெழுப்பி எங்கும் பறக்கின்றன. அவ்வொலி கேட்டு மயில்களுக்குப் பரிசளிப்பதுபோல் கொன்ற மரங்கள் மலர்களைச் சொரிகின்றன. கொன்றையின் பூந்தாது கிதறி கற்கள் மீது படிவதால் அவை பொன்னுரை கல்லெனத் தோற்றமளிக்கின்றன. கற்கள் மட்டுமா? வண்டுகளும் அங்கே தங்கக் கட்டிகளாகத் திகழ்கின்றன. எங்ஙனம்? சுனைகளில் உள்ள தாமரைப் பூக்களை அவை குடைந்து தேனுண்ணும்போது ஒளிமிக்க பூந்தாதுகள் படிவதால் பொன்னிறமடைகின்றன.

ஓங்கி வளர்ந்துள்ள மூங்கில்களின் கணுக்களிலிருந்து முத்துக்கள் உதிர்கின்றன. சில வேளைகளில் மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்வதால் தீத்தோன்றிக் காடே தீப் பட்டது போற்றோன்றுவதுண்டு.



இலவமரங்களில் செந்நிறப் பூக்கள் நிறையப் பூத்துள்ளன. அவற்றின் இடையே கார்மயில் ஒன்று நிற்பது, எரி நடுவுள் பெண்கொடி ஒருத்தி நிற்பதுபோன்ற தோற்றத்தைத் தரு கிறது.

அசைந்து வீசும் குளிர்தென்றல் வேனிற் பருவத்தில் மாமரங்களின் மகரந்தத்தில் நன்கு படிந்து கணக்கற்ற பிஞ்சு களைத் தோற்றுவிக்கின்றது.

குழவியை ஈன்ற ஒரு மந்திக்குத் தன் அருமைக் குட்டிக்குத் தேனூட்ட வேண்டுமென்ற ஆசை தோன்றுகிறது. உடனே மலையுச்சிக்குத் தாவிச்செல்கிறது. அங்கே தொங்கும் தேனடை களில் விரலை நுழைத்துத் தேனைத் தோய்த்துத் தோய்த்து ஆசையுடன் குட்டிக்கு ஊட்டுகிறது. மற்றொரு மந்தி கைக்குக் கிடைக்கும் கனிகளையெல்லாம் பறித்து உண்ணுகிறது. வயிறு நிறைந்ததும் அதற்கு நீர் வேட்கை தோன்றுகிறது. சுனைக்கு ஓடி, கருமணிபோல் தெளிந்து, தேங்கி நிற்கும் நீரை அள்ளி அள்ளிப் பருகுகிறது. ஆயினும் வேட்கை தீரவில்லை. சுனை நீரில் போதிய குளிர்ச்சி இல்லை என்று ஊடிக்கொண்டு மலை முகட்டுக்குச் செல்கிறது. அங்கு படிந்திருக்கும் மேகத்தைக் கீறி, அதனால் கிடைக்கும் குளிர் நீரைக் குடித்து வேட்கை தீர்கிறது.

மஞ்சு திரள்வதைக் கண்டதும் மந்திகட்கு ஒரே மகிழ்ச்சி. முந்தியடித்துக்கொண்டு மலை முகட்டுக்குத் தாவி ஓடுகின்றன. அங்கே, முகிலைக் கைகளால் அலைந்தாடி மகிழ்ச்சியில் மிதக் கின்றன.

வயதான மந்தி ஒன்று; கூனல் முதுகு; தாவிச் சென்று தேனடைகளை நெருங்க முடியவில்லை. ஆயினும் தேனின்மேல் உள்ள ஆசையோ நீங்கவில்லை. ஒரு கோலை எடுத்துத் தேனடை யைக் குத்துகிறது. இதைக் காணும் இளங்குட்டி ஒன்று வாழை இலையைக் கிள்ளியெடுத்து ஏந்தி நிற்கிறது! முதிய மந்தி குத்தியதால் அடையிலிருந்து ஒழுகும் தேன் இலையில் தேங்க, அதைக் குடித்து மகிழ்கிறது, குட்டிக் குரங்கு; ஏமாந்து நிற் கிறது முதிய மந்தி.

ஓரிடத்தில் தரை பளிங்குபோல் உள்ளது. அருகேயிருந்த மரத்தின் கனிகளின் உருவங்கள் அத்தரையில் தோற்றமளிக் கின்றன. அவை, கனிகள் அங்கு தொங்குவதைப்போன்ற காட்சியைத் தோற்றுவிக்கின்றன. ஒரு குரங்கு, நிழலுருவில் தெரியும் பழங்களை உண்மையான பழங்கள் என்றெண்ணிக் கைநீட்டிப் பறிக்க முயல்கிறது. பழமாக இருந்தால்தானே பறிக்க முடிவதற்கு: நிழலுருவாதலால் அக் குரங்கின் நகங்கள் பளிங்குத் தரையில் பட்டுத் தேய்கின்றன.

இலவமரங்கள் பூக்கின்றன. பசிய இலைகட்கிடையே சிவப்பு நிறத்துடன் உள்ள பூக்களைக் காணும் குரங்கு, அம் மரத்தைத் தீப்பற்றிக்கொண்டதாக எண்ணிப்பதறுகிறது. தோன்றியுள்ள தீயைப் பரவவிடாது அணைக்கத் துடிக்கிறது. பச்சை மூங்கில் கொத்தைப் பறித்து அதன்மீது வேகவேகமாக வீசுகிறது.

காந்தள் மலர் செந்நிறமுடையது. அதனுள் வண்டு ஒன்று நுழைந்து தேனுண்ணுகிறது. மலரிடையே வண்டைப் பார்த்த மந்தியொன்று நெருப்பில் வண்டு வீழ்ந்துவிட்டதாக எண்ணி விடுகிறது. "ஐயோ, பாவம்! வண்டு நெருப்பில் வீழ்ந்து தவிக்கிறதே! எப்படி அதைக் காப்பாற்றுவது?" என்று எண்ணிச் செய்வதறியாது கையைப் பிசைந்து கொள்கிறது.

ஊடுதல் மக்களிடத்தில் மட்டும்தான் உண்டு என்பதில்லை. விலங்குகளிடத்தும் இத்தன்மையைக் கவிஞர்கள் அழகுறக் காட்டுவர். ஈங்கோய் மலையில் பெண்யானை ஒன்று தன் களிறுடன் ஊடிக் கொள்கிறது; களிறுடன் திளையாது உறங்குவது போலப் பாசாங்கு செய்கிறது. ஊடலைத் தணிக்க எண்ணும் களிறு, சுவைமிக்க கதலிக்குலைக் ஒன்றினைக் கொண்டுவந்து பிடிக்கு ஊட்டுகிறது. ஆண்யானையின் அன்புப் பெருக்கைக் காணும் பிடியும் ஊடல் நீங்கி உவகை கொள்கிறது.

காதற் பெருக்கோடு களிறு ஒன்று தன் பிடியுடன் கூடி மகிழ்கிறது. புணர்ச்சிக்குப்பின் சோர்வு தோன்றுதல்இயல்பு. சோர்வுற்றுள்ள பெண்யானை காற்றின்மையால் வருந்துகிறது. அச்சோர்வைப் போக்க ஆண்யானை இலைக் கொத்துகளை ஒடித்து வீசிக் காற்றுண்டாக்குகிறது. காற்றுக் கிடைத்தமையால் பெண்யானையும் களைப்பு நீங்கிக் களிப்புக் கொள்கிறது. மேலும், ஆண்யானை, சந்தனப்பூம் பைந்தழையைச் செந்தேனில் தோய்த்துத் தன் மடப்பிடிக்குக் கொடுக்கிறது. அதைப் பெற்றுண்ணும் பிடியின் கண்கள் களிக்கக் களிறும் களிக்கிறது.

வேடுவர்கள். யானைகள் கொல்லைக்குள் புகுவதைத் தடுப்பதற்காக ஆங்காங்கே குழிகளைத் தோண்டிவைத்திருப்பர். வழியில் அத்தகைய புதைகுழிகள் உள்ளனவா என்று அறிய மரக்கிளைகளை ஒடித்துத் தண்டுபோல் ஊன்றிப்பார்த்து ஊறின்மையை அறிந்து யானைகள் கவனமுடன் செல்லுகின்றன.

பாம்புகள் இரவு நேரத்தில் இரைதேடப் புற்றைவிட்டு வெளிவருகின்றன. வந்த அவை மீண்டும் புற்றுக்கே விரைந்தோடுகின்றன. காரணம்? புற்றருகே பன்றியொன்று படுத்திருக்கிறது. பகலில் பூமியைக் கிளறியபோது அதன் கொம்பினிடையில் மணி ஒன்று தங்கிவிட்டது. அஃது ஒளிவீசுகிறது. கரிய நிறமுள்ள பன்றி இடியைப் போன்றும், மணியொளி மின்னலைப் போன்றும் தோன்றியதால் பாம்புகள் பயந்து மீண்டும் புற்றுக்கே ஓடுகின்றன. தோகை மயிலினங்கள் மணி வரைமேல் ஒகை செறி ஆயத்தோடே ஆடுவதால் பகலிலும், பாவம், பாம்புகளால் வெளிவர முடிவதில்லை.

விலங்கினங்களைப் போலவே வேடுவர்கள் பற்றியும் நூல் விளக்கமுறக் கூறுகிறது. குறவர்கள் வளர்க்கும் தினைப் புனத்தை யானைகள் புகுந்து அழிப்பதுண்டு. அவற்றை விரட்ட வேடுவர்கள் கவண்கொண்டு கல்லெறிய, அவை மூங்கில்களைத் தாக்கி முத்துக்களை உதிர்க்கின்றன. வேடுவன் ஒருவன் வேட்டைக்குச் செல்கிறான். அங்கொரு மான் தென்படுகிறது. அதைக் கொல்ல அம்பு தொடுக்க முயல்கிறான். அதற்குள் மானின் மருண்ட கண்கள் அவனுக்குத் தென்படுகின்றன. மனைவியின் கண்களை மானின் கண்கள் நினைப்பூட்ட, அவனிடம்





கனிவு பிறக்கிறது; கணையைக் தூர எறிகிறான். "கன்னிமானே! ஏன் கவலை கொள்கிறாய்! உன் மீது அம்பு தொடுக்கமாட்டேன். பையப் போ" என்று சொல்லும் முறையில் கையசைத்து அம்மானைச் செல்லவிடுகிறான். வேட்டைக்குச் செல்லும் மற்றொரு வேடுவன் கண்களில் யானைக் கன்று ஒன்று தனித்துத் தென்படுகிறது. யானைக் கூட்டத்தைபிரிந்து தளர்வுற்றிருக்கும் அக்கன்றின் நிலை அவனை இரக்கத்திலாழ்த்துகிறது. "ஏழை இளமாதே! என்னோடு வா!" என்று இட்டுச் சென்று, அதை யானைத் தொகுதிகளுடன் இணைத்துவிட்டு, வீடு திரும்புகிறான்.

மான்குட்டி ஒன்று தன் ஆயம் நீங்கித் தனித்து நின்று தவிக்கிறது. அஞ்சி நிற்கும் அக்குட்டியைக் குறமகள் ஒருத்தி கைகளில் அணைத்து இல்லத்திற் கெடுத்தேகுகிறாள். வீட்டில் மலைத்தேன் இருக்கிறது. சந்தன இலையைப் பறித்து. அதைத் தேனிலே தோய்த்து, அவ்விளமானுக்கு ஊட்டுகிறாள். குறமான்! புனத்தில் விளைகின்ற தினையைக் குறத்தி கல்லுரலில் இட்டு, யானை வெண்கொம்பு கொண்டு இடிக்கிறாள். தினை இடிந்து மாவு கிடைக்கிறது. வீட்டுக் குறவன், மலையிலிருந்து எடுத்த தேனோடு வருகிறான். புதிய தேனில் வெளியமாவைக் கலந்து இனிமை பொங்க உண்ணுகின்றனர்.

வேடுவரின் இளமக்கள் கொல்லைகளில் சோளக் கதிர்களைக் கொய்கின்றனர். அவற்றைச் சுட்டு உண்ணவேண்டும் என்ற ஆசையோடு வீடு திரும்புகின்றனர். வழியில் மலைப் பன்றிகள் கிழங்குகளை அகழ்ந்ததால் உண்டான குழிகளில் செம்பவளக் கற்கள் ஒளிவீசிக் கிடக்கின்றன. அவ்வொளியைத் தீயென மயங்கி வேடுவர் மக்கள் தம் கைகளில் உள்ள கதிர்களைச் சுடக்கருதி நீட்டுகின்றனர்.

இவ்வாறான எழில் நிரம்பிய மலையில் மழை பொழிகிறது. அம்மழைப் பொழிவைக்கொண்டு புலவர் அரிய கற்பனையைத் தோற்றுவிக்கிறார். மலையில் ஒரு பக்கம் பாம்பு யானையை அழிக்கிறது; மற்றொரு பக்கம் புலி மானினைக்கொன்று அதன் உடலைக் கவ்வி உண்ணுகிறது. இவை இரங்கத்தக்க காட்சிகளன்றோ! இவற்றைக் கண்டு மேகம் வருந்திச் சொரிந்த கண்ணீர்ப் பொழிவே மலையிற்றோன்றிய மழைப் பெருக்கு என்கிறார் புலவர்.

இவற்றைப் படிக்கும்போது நம் கண்களும் நீரைச் சொரிகின்றன; ஆம்; இன்பக் கண்ணீர்! ★



(8-ம் பக்கம் தொடர்ச்சி)



❖ ஆசிரியர்களுக்கு நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி, இலவச மருத்துவ வசதி போன்றவை கழக அரசில் புதிதாகத் தரப்பட்டுள்ளன.

❖ சேலம் இரும்பாலை நூறு கோடி ரூபாயில்! ஆலங்குளத்தில் ஆறு கொடி ரூபாயில் அரசு சிமெண்டுத் தொழிற்சாலை தொடங்கிவிட்டது. அரக்கோணத்தில் ஏழு கோடி ரூபாயில் வார்ப்பு இரும்பாலை அமைகிறது. நைலான் மின்வலை தயாரிக்கும் தொழிற்சாலை, ஐம்பத்திரண்டு கோடி ரூபாய் செலவில் தூத்துக்குடி உர ஆலை, டயர் தொழிற்சாலை - தொழில்வளம் பெருகுகிறது கழக ஆட்சியில் என்பதற்கு இவை சில எடுத்துக்காட்டுக்கள்.



❖ பி. யு. சி. வகுப்பு வரையில் மாணவர்களுக்கு இலவசக் கல்வி என்பது கழக அரசின் சாதனை. இதனைப் படிப்படியாக பல கட்டங்களாகப் பட்டப்படிப்பு மாணவர் வரையில் இலவசக் கல்விச் சலுகை வழங்கிடவும் கழக அரசு பரிசீலிக்கத் தலைப்பட்டுள்ளது.

❖ 12,500 செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த 'ஹயர் கிரேடு' சம்பளத்தை மாற்றி அவர்கள் படிப்புக்கு ஏற்றபடி 'செகண்டரி கிரேடு' சம்பளங் கொடுக்க முன்வந்தது கழக அரசுதான்.

❖ ஓய்வு பெற்ற ஆசிரியர்கட்கு ஓய்வுக்கால ஊதியம் !



❖ மாநில அளவில் நமது சக்திக்கேற்ற நிலையில் வேலை வாய்ப்புக்களைப்பெருக்கிட, இந்த ஆண்டு 6500 ஆசிரியர்களுக்கும், 2400 பொறியியல் துறையினர்க்கும் வேலை தரும் புரட்சித் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

❖ 1966ல் கல்விக்காகச் செலவிட்ட தொகை 44 கோடி ரூபாய் என்று இருந்ததை, இன்று 67 முதல் 70 கோடி ரூபாயாக உயர்த்தியிருப்பது கழக அரசு.

❖ 1966ல் மருத்துவ நலனுக்காகச் செலவிடப்பட்டது 16 கோடி ரூபாய்; இன்று அதை 25 கோடி ரூபாயாக கழக அரசு உயர்த்தியுள்ளது!



❖ தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு அவசரச் சட்டத்தின் மூலம் கூலி நிர்ணயம் செய்ததோடு, அந்த மாவட்டத்தில் வேளாண்மைத் துறையில் அமைதி காத்து உற்பத்தியையும் பெருக்கியது கழக அரசு.

❖ வரும் ஆண்டு முதல் 'விவசாயப் பல்கலைக் கழகம்' செயல்பட திட்டம் தீட்டியிருப்பது கழக அரசு.

❖ நிலமும், வீடுமற்ற ஏழைகளுக்கு லட்சக்கணக்கில் இந்த நாலே ஆண்டுகளில் பட்டாக்கள் வழங்கி அவர் தம் புன்னகையைக் கண்டு பூரித்தது கழக அரசு.

❖ 1972-க்குள் தமிழ்நாட்டில் மின்னொளி இல்லாத கிராமங்களே இருத்தலாகாது எனச் சூளுரைத்து, தீவிரமாக அந்தப் பணியை பலகோடி ரூபாய் செலவில் நடத்தி வருவது கழக அரசு.



- தமிழகத்தில் என்றுமில்லாத அளவுக்கு பதினெட்டு ரயில்வே மேம்பாலங்கள் கட்டுவதற்கான அனுமதியைபெற்றுப் அந்த வேலை களைக் கழக அரசு தொடங்கிவிட்டது.

- பசுமைப் புரட்சி ஓங்கிட நிலவள வங்கிகளை மாநிலம் முழுதும் அமைத்திடவும், நீர்ப்பாசன கூட்டுறவுக் கழகத்தின் மூலம் ஒரு ஏகரா, இரண்டு ஏகரா வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு முறையில் கடன் வசதி பெற்றுத் தங்கள் நிலங்களை வளப்படுத்தவும் வழிகண்டு செயல்படுவது கழக அரசு.

- விவசாயிகள் கருத்தரங்குகள் நடத்தி ஆங்காங்குவிவசாயிகளின்பிரதி நிதிகளால் சொல்லப்படுகிற குறைபாடுகளைக் கவனித்து கோரிக்கை களை உடனடியாகக் கவனித்தது கழக அரசு.

- விற்பனை வரி விதிவிலக்கு வரம்பு பத்தாயிரம்வரை இருந்ததை ரூபாய் பதினைந்தாயிரம் என உயர்த்தி சலுகை காட்டியது கழக அரசு.

- ஐம்பதாயிரம் ரூபாய் என்றிருந்த "கம்பவுண்டு" முறையை ரூபாய் எழுபத்தையாயிரம் வரை ஆக்கியது மட்டுமல்லாமல், மேலும் இதில் சலுகை அளிப்பது பற்றித் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டி ருப்பது கழக அரசு.

- மனுநீதித் திட்டம் கண்டு, மாதந்தோறும் 5-ந் தேதியன்று அரசு அதிகாரிகள் கிராமம் கிராமமாகச் சென்று மனுக்களைப் பெற்று உட னடியாக அதில் முடிவுகாணும் ஏற்பாடு...

- ஓய்வு நேரத்தில் நாட்டுக்கு உழைத்திட வேண்டும் என்கிற எண் ணத்துடன் தொண்டுள்ளம் கொண்டோரால் அமைக்கப்பட்ட 'சீரணிப்படை' மூலம் ஆங்காங்கே பாதைகள் அமைத்தல், கட்டிடங் கள் எழுப்புதல், பராமரிப்புப் பணிகள் போன்றவைகளைக் குறைந்த செலவில் நடத்துவது...

- எல்லாப் புறம்போக்கு நிலங்களையும், காடுகள் என்ற பெயரால் உள்ள — உண்மையில் காடுகள் அல்லாத இடங்களையும் 72-க்குள் ஏழைகளுக்கு வழங்கிட வகுத்துள்ள முறை...

- பிச்சைக்காரர் பிரச்சினை போக்க அவர்களுக்கு விடுதிகள் கட்டி மறு வாழ்வு அளிக்க இந்த ஆண்டு 40 லட்ச ரூபாயில் செயல்படுகின்ற திட்டம்...

- ஆகாஷ்வாணி, வானொலியானது...

- 'டால்மியாபுரம்' கல்லக்குடியானது...

— இப்படி எண்ணிறந்த அருஞ்சாதனைகள் நாலாண்டு காலத்தில் கழக அரசின் குன்றாத ஆர்வத்தின் விளைவுகளாகக் காட்சி தருகின்றன.

சென்ற 1967-பொதுத் தேர்தலுக்கும், 1971 பொதுத் தேர்தலுக்கு மிடையில் இந்திய அரசியலில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களைக் கவனித் தோமேயானால், ஒன்றுபட்டிருந்த அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி இர ண்டாகப் பிளவு பட்டதும்; திரு. நிஜலிங்கப்பா தலைமையில் இயங்கும் காங்கிரசார் 'பத்து அம்சத்திட்டம்' என்கிற முற்போக்குத் திட்டத்திற்கு இதுவரை காட்டி வந்த உதட்டளவு ஆதரவையும் கைவிட்டு, தனி நபர் ஒருவரை பதவியிலிருந்துஇறக்கும் ஒரு அம்சத்திட்டத்தை மேற்கொண்டு சோஷலிசக் கொள்கைகளுக்கு விரோதிகளாகப் பகிரங்கமாகத் தங்களை அடையாளங் காட்டிக் கொண்டதும், ஓட்டு முறையின் மூலம் பெறப் படும்—படிப்படியான—முறையான—சமூக—பொருளாதார மாற்றங்களில் நம்பிக்கையில்லாத வேட்டு முறையில் மோகங் கொண்ட 'நக்சல்பாரிகள்' இந்தியாவின் பல பகுதிகளில் தலையெடுத்து நிற்பதும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும்.

இந்நிலையில், மக்கள் சமுதாயம் என்கிற தோணியை வன்முறைத்தீவிர வாதம் என்கிற புயலிலிருந்தும், பிற்போக்கு வாதம் என்கிற நீர்மட்டத் திற்குக் கீழே மறைந்திருந்து அவ்வப்போது தடுத்துநிற்கும் பாறைகளி லிருந்தும் காப்பாற்றிக் கொண்டு செல்ல வேண்டுமென்பதே தி. மு. கழகத்தின் கணிப்பாகும்.

**விஞ்ஞானயுகத்திற்கேற்ற சமதர்ம சமுதாயம் அமைப் பதே தி. மு. கழகத்தின் இலட்சியமாக இருக்கும்.**

அதற்காகத் தமிழகத்திலும் இந்தியாவிலும் இத்தகு இலட்சியம் கொண்ட சக்திகளுடன் தி. மு. கழகம் ஒத்துழைக்கும்.

அதே நேரம்; தமிழகத்தைப் பொறுத்த வரையில் தி. மு. கழகத்தைத் தங்களுக்குப் பாதுகாப்பான மெய்க்காப்பாளனுக வும், தங்களுக்குப் பணியாற்றும் ஊழியனுகவும், தங்கள் வீட் டில் ஏற்றிவைக்கப்பட்ட விளக்காகவும் தமிழ்ப் பெருங்குடி மக்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிருர்கள் என்பது காலத்தால் கழகத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கும் ஒரு பெரும் பொறுப் பாகும்.

''தரணி புகழ வாழ்ந்திருந்த புகழ்பெற்றது தமிழ் மரபு! மற்ற நாடுகள் எல்லைகளை ஏற்படுத்துவதற்கு முன்பு — எல்லையில் ஏற்படும் தொல்லைகள் நீக்கியதற்கும் முன்பு— அவர்கள் அரசு என்ற ஒன்று ஏற்படாததற்கும் முன்பு — அரச நீதிகளை வகுப்பதற்கும் முன்பு — காடுகளில் அவர் கள் உலவிக் கொண்டிருந்த போது — உலகமே வியந்து உச்சிமேல் வைத்து மெச்சத்தக்க அரசியல் நெறி பெற்றுத் திகழ்ந்தது தமிழகம்! ... அந்த உன்னதமான தமிழ் மரபு க்கு ஏற்றவகையில் நம்மைத் தயார்படுத்திக் கொள்ள குறைந்த அளவு 50 ஆண்டுகளாவது ஆகும் ... வெறும் அரசியல் நடத்த 67-ல் ஆட்சி அமைக்க மட்டும் நமது கட்சி இருக்கிறது என்று நினைக்காமல் - 67-க்குப் பிறகும் தொடர்ந்து 50 ஆண்டு காலத்திற்காவது நமது பணி இருக்கிறது என்ற கடமை உணர்ச்சி நம் மனதில் ஆழப் பதிய வேண்டும் — ... இந்தத் தமிழ்மரபு வளர்வதற்கு இடையூருக ஆட்சியாளர் குறுக்கிடுவதால்தான் நாங்கள் அரசியலில் ஈடுபடுகிறேம்''.

—என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் 30—12—66-ல் விருகம்பாக்கம் மாநாட்டில் தனது தலைமையுரையில் வேங்கை யென முழங்கியது இன்னும் நம் காதுகளில் ஒலித்துக்கொண் டிருக்கிறது.

தமிழ் இனம் - தமிழ் மொழி - தமிழ் மரபு - இவைகளைக் காத்து வளர்க்க வேண்டுமென்ற அண்ணனின் வாசகங்களே தி. மு. க. வின் வேதமாக; அண்ணன் இட்ட கட்டளையாக இரு க்குமென்பதை அழுத்தந்திருத்தமாகப் பெருமிதத்துடன் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேம்.

ஆனல் அதே நேரம்; இந்திய ஒருமைப்பாடு என்பது வெவ் வேறு மொழி —கலை —கலாச்சாரம் ஆகியவற்றை உருத்தெரி யாமல் ஆக்கிப் புதிதாக உருக்கி வார்க்கப்படும் வார்ப்படம் அல்ல; அவையவை இடர்பாடுகளின்றி ஆங்காங்கே ஆரோக் கியமான சூழ்நிலையில் வளர இடமளித்தால்தான் இந்திய



ஒருமைப்பாடு மேலும் வலுப்பெறும் என்று நம்புகிறோம் Union என்கிற ஒற்றுமைதான் வலுவான இந்தியாவை உருவாக்குமே யல்லாது; வெவ்வேறு மொழி—கலை —கலாச்சாரங்களை அடையாளம் தெரியாமல் மாற்றி உருவாக்கப்படும் 'ஒன்றிப்போன தன்மை' என்கிற (Uniformity) வலுவான இந்தியாவிற்கு ஆக்கமளிக்காது என்பதையும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறோம்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், தமிழும் ஆங்கிலமும் இணைந்து பயன்தரும்வகையில் கழகத்தின்கொள்கைஇருக்கும்.

அதற்கேற்றவாறே - சட்டமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மூலம் அரசினர் கல்விக் கூடங்களில் இந்தியை அகற்றி; தமிழ் — ஆங்கிலம் என்கிற இருமொழிக் கொள்கை அமுலாக்கப்பட்டிருக்கிறது.

எத்தகைய எதிர்ப்புகள் எதிர்ப்படினும், இந்த இருமொழிக் கொள்கையில் எந்தவித மாற்றமும் இருக்காது; இந்திக்கு இடமும் இருக்காது.

இந்தி ஆதிக்கத்தைப் பரப்பி உருவாக்க நினைப்பது வலுவான 'ஹிந்தியா' ஆகுமே தவிர இந்தியா ஆகாது என்பதைக் கருத்தில் கொண்டு; ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கத் தக்க விதத்தில்; அரசியல் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்ய வேண்டும் என்றும்; அதுவே வலுவான இந்தியாவிற்கு இந்தத் தலைமுறையினர் எழுப்பும் அடிப்படையாக இருக்கும் என்றும் கருதுகிறோம்.

இந்திய அரசியல் முறை 'கூட்டாட்சி முறை' (Federalism) என்று வர்ணிக்கப்பட்டாலும், அந்தத் தராசு மத்திய அரசு பக்கம் அதிகபட்சம் சாய்ந்திருப்பதால்; அதிகாரத்துறையிலும் நிதித்துறையிலும் மாநிலங்கள் செவ்வனே செயல்பட முடியாமல் தடைகள் இருப்பதால்; அதேநேரம் இந்தியா வலுப்பெற்றதாக இருக்க வேண்டுமென்கிற இலட்சியத்திற்கும் ஊறு தேடாமல்; எந்தெந்தத் துறைகளில் வலுவான இந்தியா இயங்குவதற்காக மத்திய அரசு செயல்பட வேண்டுமோ அந்த அதிகாரங்களை மட்டும் மத்திய அரசிடம் கொடுத்து விட்டு; இதர அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்படும் வகையில் அரசியல்சட்டத்தைத் திருத்தி; மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கருதுகிறோம்.

இந்த நோக்கத்தோடு நமது அரசு அமைத்த வல்லுநர் குழுவின் அறிக்கை கிடைத்த பிறகு; அந்த அடிப்படையில் அகில இந்திய ரீதியில் மாநில சுயாட்சி இயக்கத்திற்கான ஆதரவு திரட்டும் இயக்கத்தைக் கழகம் மேற்கொள்ளும்.

அரசியல் துறை அதிகாரங்களும், நிதித்துறை அதிகாரங்களும் மாநிலங்களுக்கு மேலும் தேவை என்று கேட்பது; மாநிலங்களில் இருப்போர் அதிக அதிகாரங்களை நுகர வேண்டுமென்கிற ஆசையால் அல்ல; மாநில அரசுகள் மக்களுக்கு நெருங்கிய நிலையில் இருப்பதால் அந்த அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மேற்கொண்ட பிறகே எதிர்பார்க்கும் விதத்தில் மக்களுக்குத் தொண்டாற்ற முடியும் – என்பதால்தான் மாநில சுயாட்சி கோருகிறோம் என்பதையும் தெளிவாக்க விரும்புகிறோம்.

(17-ம் பக்கம் பார்க்க)

(34-ம் பக்கம் தொடர்ச்சி)

## சேலம் மாவட்டம்

| | தொகுதி | கழக வேட்பாளர் | முற்போக்கு கூட்டணி வேட்பாளர் | மாற்றுக் கட்சிகள் |
|---|---|---|---|---|
| 115 | சேலம் 1 | கே. செயராமன் | இல்லை | சிண்டி<br>ஜன சங் |
| 116 | சேலம் 2 | க. இராசாராம் பி. ஏ. | ,, | சிண்டி<br>ஜன சங்<br>சுயே 1 |
| 117 | வீரபாண்டி | எஸ். ஆறுமுகம் | ,, | சிண்டி<br>இட. கம்<br>சுயே 1 |
| 118 | பனைமரத்துப்பட்டி | டி. பொன்னுமலை | ,, | சிண்டி<br>சுயே 2 |
| 119 | ஏற்காடு | வி. சின்னசாமி | | சிண்டி |
| 120 | தலைவாசல் | எம். மாரிமுத்து | ,, | சிண்டி<br>சுயே 2 |
| 121 | ஆத்தூர் | பழனிவேல் கவுண்டர் | ,, | சிண்டி |
| 122 | இராசிபுரம் | டாக்டர் நயினமலை | ,, | சிண்டி<br>சுயே 1 |
| 123 | சேந்தமங்கலம் | சின்னவெள்ளையன் | ,, | சிண்டி<br>சுயே 1 |
| 124 | ஓமலூர் | யு. செல்லதுரை | ,, | சிண்டி<br>சுயே 2 |
| 125 | திருச்செங்கோடு | எஸ். கந்தப்பன் | ,, | சிண்டி<br>சுயே 1 |
| 126 | நாமக்கல் | பழனிவேல் | ,, | சிண்டி<br>சுயே 2 |
| 127 | கபிலர்மலை | வேலப்பன் | ,, | சிண்டி<br>சுயே 1 |
| 128 | சங்கரி | முத்து | ,, | சிண்டி<br>சுயே 1 |
| 129 | எடப்பாடி | ஆ. ஆறுமுகம் | ,, | சிண்டி |
| 130 | மேட்டூர் | இல்லை | எம். சுரேந்திரன் பி. சோ. | சிண்டி<br>சுயே 1 |
| 131 | தாரமங்கலம் | எம். பரமசிவம் | இல்லை | சிண்டி |

## திருச்சி மாவட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| 132 | திருச்சி ஒன்று | வி. கிருட்டணமூர்த்தி | இல்லை | சிண்டி<br>சுயே 1 |
| 133 | திருச்சி இரண்டு | அன்பில் தருமலிங்கம் | ,, | சிண்டி<br>சுயே 2 |
| 134 | திருவெறும்பூர் | கே. காமாட்சி | ,, | சிண்டி |
| 135 | திருவரங்கம் | காமாட்சி அம்மாள் | ,, | சிண்டி<br>சுயே 1 |
| 136 | முசிறி | முத்துச்செல்வன் | ,, | சிண்டி<br>சுயே 2 |
| 137 | தொட்டியம் | எஸ். கே. வடிவேலு | ,, | சிண்டி |

(47-ம் பக்கம் பார்க்க)

## 'அஞ்சுகம்' ஏட்டுக்கு வாழ்த்துகள்

வெண்திரை காட்சிக்கு
நிறைந்த வசதியுள்ள அரங்கு

**குளித்தலை லக்ஷ்மி தியேட்டர்**
**கடம்பர்கோவில் பாலம்பிகை டாக்கீஸ்**

ரசிகர்களுக்கு எங்களது அன்பு நன்றி.

நிர்வாகிகள் :
லக்ஷ்மிதியேட்டர் & பாலம்பிகைடாக்கீஸ்
குளித்தலை.



## அஞ்சுகத்துக்கு வாழ்த்துகள்

★ சுவையான உணவு
★ சுத்தமான ஏற்பாடு
★ தரமான பொருள்கள்
★ உபசரிப்பில் இனிமை

பலரும் விரும்பி வருகின்ற இடம்

**மதிவாணன் உணவு விடுதி**

தாங்களும் வருக வருக !! சுவை உணவு பருக

உரிமையாளர் :
**S. இராசு**
மதிவாணன் உணவு விடுதி
பஸ் ஸ்டாண்ட்—குளித்தலை.

(45-ம் பக்கம் தொடர்ச்சி)

| | தொகுதி | கழக வேட்பாளர் | முற்போக்கு கூட்டணி வேட்பாளர் | மாற்றுக் கட்சிகள் |
|---|---|---|---|---|
| 138 | லால்குடி | முத்துச்செல்வன் | ,, | சிண்டி சுயே 3 |
| 139 | அரியலூர் | கோ. சிவபெருமாள் | ,, | சிண்டி சுயே 2 |
| 140 | உப்பிலியபுரம் | து. ப. அழகமுத்து | ,, | சிண்டி சுயே 1 |
| 141 | வரகூர் | கே. பழனிவேலன் | ,, | சிண்டி சுயே 1 |
| 142 | பெரம்பலூர் | ஜே. எஸ். இராசு | ,, | சிண்டி சுயே 2 |
| 143 | ஆண்டிமடம் | எஸ். சதாசிவம் | ,, | சிண்டி |
| 144 | ஜெயங்கொண்டம் | ஏ. சின்னசாமி | ,, | சிண்டி சுயே 1 |
| 145 | குளித்தலை | மா. கந்தசாமி பி.ஏ பி எல் | ,, | சிண்டி |
| 146 | புதுக்கோட்டை | இல்லை | கே. ஆர் சுப்பையா | சிண்டி சுயே 2 |
| 147 | விராலிமலை | இளஞ்செழியன் | இல்லை | சிண்டி சுயே 1 |
| 148 | கிருஷ்ணராயபுரம் | சௌந்தரபாண்டியன் எம்.ஏ.பி.எல். | ,, | சிண்டி சுயே 1 |
| 149 | கடவூர் | பி. கிருஷ்ணசாமி | ,, | சிண்டி |
| 150 | அரவக்குறிச்சி | இல்லை | அப்துல் ஜப்பார் மு. லீக் | சுதந்தி சுயே 2 |
| 151 | திருமயம் | தியாகராசகாடுவெட்டியார் | இல்லை | சிண்டி சுயே3 இட, க. |
| 152 | ஆலங்குடி | கே. வி சுப்பையா | ,, | சிண்டி சுயே 1 |

## தென்னாற்காடு மாவட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| 153 | விருத்தாச்சலம் | எம். செல்வராசு | இல்லை | சிண்டி சுயே 1 |
| 154 | விழுப்புரம் | எம். சண்முகம் | ,, | சிண்டி சுயே 1 |
| 155 | கண்டமங்கலம் | மு. இராமன் | ,, | சிண்டி சுயே 1 |
| 156 | திருக்கோவிலூர் | ஏ. எஸ். குமாரசாமி | ,, | சிண்டி |
| 157 | முகையூர் | கோ. பத்மாவதி அம்மாள் | ,, | சிண்டி சுயே 2 |
| 158 | உளுந்தூர்பேட்டை | வி. சுப்பிரமணியம் | ,, | சிண்டி சுயே 1 |
| 159 | திண்டிவனம் | ஜி. ராஜாராம் | ,, | சிண்டி சுயே 2 |
| 160 | வானூர் | என். முத்துவேல் | ,, | சிண்டி சுயே 1 |
| 161 | செஞ்சி | சகாதேவன் | ,, | சிண்டி |
| 162 | குறிஞ்சிப்பாடி | என். ராஜாங்கம் | ,, | சிண்டி |
| 163 | காட்டுமன்னார்கோயில் | எஸ். பெருமாள் | ,, | சிண்டி சுயே 1 |
| 164 | சிதம்பரம் | பொன். சொக்கலிங்கம் | ,, | சிண்டி சுயே 1 |



| | தொகுதி | கழக வேட்பாளர் | முற்போக்கு கூட்டணி வேட்பாளர் | மாற்றுக் கட்சிகள் |
|---|---|---|---|---|
| 165 | புவனகிரி | இல்லை | என். ஏ. அபுசாலி சுயேட்சை தி. மு. க. ஆதரவு | சிண்டி சுயே 4 |
| 166 | ரிஷிவந்தியம் | என். தருமலிங்கம் | இல்லை | சிண்டி |
| 167 | மேல்மலையனூர் | ஆர். ஆர். முனுசாமி | ,, | சிண்டி சுயே 2 |
| 168 | கடலூர் | கோவிந்தராசன் | ,, | சிண்டி சுயே 1 |
| 169 | நெல்லிக்குப்பம் | வி. கிருஷ்ணமூர்த்தி | ,, | சிண்டி இ. கம் சுயே 2 |
| 170 | பண்ருட்டி | எஸ். ராமச்சந்திரன் | ,, | சிண்டி இ கம் |
| 171 | மங்களூர் | ஜி. ஜெபமாலை | ,, | சிண்டி சுயே 3 |
| 172 | சங்கராபுரம் | நாச்சியப்பன் | ,, | சிண்டி |
| 173 | கள்ளக்குறிச்சி | டி. கேசவலு | ,, | சிண்டி |

## தர்மபுரி மாவட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| 174 | பாலக்கோடு | எம். வி. கரிவேங்கடம் | ,, | சிண்டி |
| 175 | பெண்ணாகரம் | மாணிக்கம் | ,, | சிண்டி |
| 176 | கிருஷ்ணகிரி | இ. மன்னியப்பன் | ,, | சிண்டி |
| 177 | காவேரிப்பட்டிணம் | வி. சி. கோவிந்தசாமி | ,, | சிண்டி |
| 178 | ஓசூர் | இல்லை | ஆர். வேங்கட ரெட்டி (தி. மு. க ஆதரவு) சுயே | சுதந் சுயே |
| 179 | உத்தனப்பள்ளி | ஆர். ராசாராம் | இல்லை | சிண்டி சுயே 2 |
| 180 | தர்மபுரி | ஆர். சின்னசாமி | ,, | சிண்டி சுயே 1 |
| 181 | அரூர் | டாக்டர் சின்னராஜ் | ,, | சிண்டி சுயே 2 |
| 182 | ஊத்தங்கரை | கே. ஆர். கிருஷ்ணன் | ,, | சிண்டி சுயே 1 |

## தஞ்சை மாவட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| 183 | திருவையாறு | இளங்கோவன் | ,, | சிண்டி இ. கம் சுயே 2 |
| 184 | தஞ்சாவூர் | சி. நடராசன் | ,, | சிண்டி |
| 185 | பாபநாசம் | என். கணபதி | ,, | சிண்டி |
| 186 | வலங்கைமான் | என். சோமசுந்தரம் | ,, | சிண்டி சுயே 3 |
| 187 | கும்பகோணம் | பத்மநாபன் | ,, | சிண்டி சுயே 1 |
| 188 | ஆடுதுறை | கே. ராசமாணிக்கம் | ,, | சிண்டி |
| 189 | சீர்காழி | இல்லை | எஸ். வடிவேலு வ. கம் | சிண்டி சுயே 1 |
| 190 | செம்பனார்கோயில் | டி. வி. சம்பத் | இல்லை | சிண்டி இ. கம் |
| 191 | மாயூரம் | என். கிட்டப்பா | ,, | சிண்டி |

(20-ம் பக்கம் பார்க்க)

பதிவு எண் 8637 அஞ்சகம்

